# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமை கல்வியும்

## புதிய பாடத்திட்டம்

## தரம் - 08



க.இளங்கோ Dip.in.teach

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும்

## தரம் - 8

## புதிய பாடத்திட்டம் - 2009

- கணிப்பீடுகள்
- செயற்பாடுகள்
- குறிப்புக்கள்

ஆசிரியர் : க.இளங்கோ (Dip.in.Teach)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும் |
| நூலாசிரியர் | : க.இளங்கோ (Dip.in.Teach) |
| மொழி | : தமிழ் |
| பக்கம் | : 120 |
| நூல் உரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பாண்டு | : 2009 March |
| கணனி வடிவமைப்பு | : இ.சுதர்சன் |
| அச்சுப்பதிப்பு | : சூரியா அச்சகம், வவுனியா. |
| விலை | : Rs. 250.00 |
| விநியோகஸ்தர் | : க.இளங்கோ (Dip.in.Teach) |
| தொடர்புகளுக்கு | : 0775020944 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரிடமிருந்து

மாணவர்களின் கற்றல் செயற்பாடானது விருத்தியடையும் பொருட்டு பல நூல்களை இதுவரை எழுதி வெளியிட்டுள்ளேன்.அந்தவகையில் 2009 இல் தரம் -8 மாணவர்களின் புதிய பாடத்திட்டத்திற்கான வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் எனும் வினாவிடைத்தொகுப்போன்றினை வெளியீடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன் .இதன் மூலம் மாணவர்கள் இலகுவாகக்கற்று கூடுதலான புள்ளிகளைப்பெற்று தமது அடைவுமட்டத்தை உயர்த்திக்கொள்ள முடியும் என்பதை உறுதியுடன் கூறி நிற்கின்றேன்.

இந் நூலைத் தொடர்ந்து பலரது வேண்டுகோளுக்கிணங்க தரம் -10 , தரம் -11 , தரம் -07 எனும் நூல்களை இறுவெட்டுக்கள் இணைத்த பிரதியாக வெளியிடவுள்ளேன். மேலும் க.பொ.த சாதரணதர மாணவர்களின் பரீட்சை பெறு பேற்றினை உயர்வடையச் செய்ய அலகுரீதியான வினாவிடைத்தொகுப்புக்களும் மாதாந்தமாக வெளியீடப்படும் என்பதனை மகீழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

அத்தோடு எனது நூல்களை நாடுமுழுவதும் விநியோகித்துத் தரும் கொழும்பில் அமைந்திருக்கும் லங்கா புத்தகசாலை நிறுவனத்தாருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

*க. கஇளங்கோ*

(ஆசிரியர் -வவுனியா வீரபுரம்
மணிவாசகர் மகா வித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. மகிழ்ச்சியாக வாழ்வோம்.
2. மனநிலைகளை பயனுள்ள விதத்தில் மாற்றிக்கொள்வோம்.
3. புரிந்துணர்வுடன் செயற்பட்டு முரண்பாடுகளைத் தவிர்ப்போம்.
4. சிறந்த தலைவர்களாவோம்.
5. வேலை உலகிற்குத் தயாராவோம்.
6. எமது பிரதேசத்தின் பொதுச்சேவைகள்
7. சனநாயக மக்கள் சமூகம்.
8. பல்கலாசார சமூகமொன்றில் நற்பிரஜையாக வாழ்தல்.
9. இயற்கை அனர்த்தங்களும் விபத்துக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 1

## மகிழ்ச்சியாக வாழ்வோம்

1) **சிந்தனை என்றால் என்ன?**

☞ மனதில் தோன்றும் எண்ணங்கள் அல்லது அக உணர்வுகள் சிந்தனையாகும் இச்சிந்தனை குவி சிந்தனை விரி சிந்தனை எனவும் அழைக்கப்படும்

2) **விரிசிந்தனை என்றால் என்ன?**

☞ பரந்த அடிப்படையில் சிந்தனையினை ஏற்படுத்திக் கொள்ளல் விரிசிந்தனை என அழைக்கப்படும்

3) **குவி சிந்தனை என்றால் என்ன?**

☞ குறிப்பிட்ட ஒரு விடயத்தில் மாத்திரம் தமது சிந்தனையினை செலுத்துதல் குவி சிந்தனை என அழைக்கப்படும்

4) **சிந்தனையின் இயல்புகள்?**

☞ காலத்திற்கு காலம் மாற்றமடையும் தன்மையுடையது.

☞ சிந்தனைகள் தனியாளுக்கு ஏற்ப வேறுபாடுடையதாகக் காணப்படும்.

☞ சிந்தனை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாறுபடும்.

☞ எல்லோரது சிந்தனைகளும் ஒரே விதமாக அமைவதில்லை.

☞ சிந்தனைகள் எல்லைகள் இல்லாதவை.

☞ சிந்தனைகள் சிறந்தனவாகவோ தீயனவாகவோ அமையலாம்.

☞ தனிப்பட்டவரது சிந்தனையினை பேச்சு , எழுத்து, செய்ற்பாடு போன்றன மூலமாக ஓரளவு அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மனிதன் தனது அன்றாட செயலில் ஈடுபடக் காரணம்?

☞ மனிதனின் சிந்தனைகள்

6) எமது வாழ்வில் பின்னடைவு ஏற்படக்காரணம்?

☞ பொருத்தமற்ற சிந்தனைகளினால் தோன்றும் செய்பாடுகளே பின்னடைவுக்கு காரணம் ஆகும்

7) வாழ்வில் சிறந்த பயன் கிடைக்கும் சந்தர்ப்பம் யாது?

☞ சிறந்த சிந்தனைகளை உருவாக்கி எந்த வேலையாக இருந்தாலும் சிந்தித்து செய்வோமாக இருந்தால் எமது வாழ்வு சிறப்பாக அமையும்.

8) உலகில் சிந்திக்கும் ஆற்றலைக்கொண்டவன் யார்?

☞ மனிதன்

9) சிந்தனை தொடர்பாக பௌத்தபோதனைகளில் கூறப்படுவது யாது?

☞ சிந்தனையை விருத்தி செய்து கொண்டு வாழ்பவனே மனிதனாவான் எனக் குறிப்பிடுகின்றது.

10) சிந்தனை தொடர்பாககத்தோலிக்க மறையில் கூறப்படுவது யாது?

☞ தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஆவார்.

11) சிந்தனை தொடர்பாகபுனித அல்குர் ஆனில் கூறப்படுவது யாது?

☞ நிச்சயமாக சிந்தித்து உணர்ந்து செயற்படுவோருக்கு உங்களுடைய இறைவனிடத்தில் நிறையவே அத்தாட்சிகள் உள்ளன. என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) மனிதனது சிந்திக்கும் ஆற்றலினால் உருவாகியவை?

- ☞ நவீன விஞ்ஞானக்கண்டுபிடிப்புக்கள்.
- ☞ கையடக்கத் தொலைபேசி
- ☞ கணினி, இணையம் , தொலைநோக்கி, செய்மதி.

13) மனித சிந்தனையின் வளர்ச்சியினால் ஏற்பட்ட உலகின் எட்டாவது அதிசயமாகக் கொள்ளப்படுவது எது?

- ☞ சிகிரியா

14) சிந்தனை மனிதவாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் ?

- ☞ பிரச்சினைகள் யாவும் மனித உள்ளங்களில் இருந்து தான் தோன்றுகின்றன. சமாதானமும் சிறந்த சிந்தனைகளும் மனித உள்ளங்களிலிருந்தோன்றுமாக இருந்தால் மனிதனுடையவாழ்வு சிறந்ததாக இருக்கும்

15) வாழ்கை தொடர்பாக அல்பேர்ட் ஐன்ஸ்டைன் கூறிய கருத்து யாது?

- ☞ வாழ்கைக்கு அர்த்தம் இல்லை என்று நினைப்பவன் மகிழ்ச்சியற்ற வாழ்கையை மேற்கொள்பவனாக இருப்பது மட்டுமன்றிஅவன் வாழ்வதற்குபொருத்தமற்றவனாகின்றான்.

16) எம [illegible] பொருத்தமற்ற சிந்தனைகள்?

- ☞ [illegible] ய முடியாது என்னும் எண்ணம்.
- ☞ ஏதாவது [illegible] என்னால் செய்ய முடியுமா என யோசித்தல்.
- ☞ வேலையை மெதுவாகச் செய்யும் எண்ணம்.
- ☞ வழங்கப்பட்ட பொறுப்புக்களைக் தட்டிக்கழித்தல்.
- ☞ சமூகத்திற்கு ஒவ்வாத செயலில் ஈடுபடல்.
- ☞ பிறருக்கு உதவி செய்யாமல் இருத்தல்.
- ☞ மனம்போன போக்கில் வாழ்கையினை அமைத்துக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்றாடக்கடமைகளைச் சரிவரச் செய்யாமை..
- பிறர் கூறும் அறிவுரைகளை கேட்க மறுத்தல்.

17) **சிறந்த சிந்தனையின் மூலம் உலகிற்கு சிறந்த சேவையினைச் செய்த சமயப்பெரியோர் யாவர்?**

- புத்தபெருமான்
- இயேசு கிறிஸ்து
- முஹம்மது நபி ( ஸல்)
- ஸ்ரீ இராமகிருஸ்ணர் ( இவ் சமயப்பெரியோர் நன்னை தீமைகளை பிரித்து அறிவித்து சமயசேவையில் ஈடுபட்டனர்

18) **சிறப்பான சிந்தனையின் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தியவர்கள்?**

- சோக்கிரட்டீஸ்
- ஐசாக் நியூட்டன்
- மைக்கல் அஞ்சலோ
- மகாத்மாகாந்தி
- அநாகரி தர்மபால
- சித்திலெப்பை
- ஆறுமுகநாவலர்

19) **மனித சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தும் மதத்தாபனங்கள் எவை?**

- கோயில்
- விகாரை
- பள்ளிவாசல்
- தேவாலயம் ( இத்தாபனங்கள் ஊடாக மனிதனது மனம் ஒருநிலைப்படுத்தப்பட்டு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்து கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) மனித சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தும் சமுதாய நிறுவனங்கள் எவை?

- ☞ தொடர்பாடல் சாதனங்கள், பொதுஊடகங்கள்
- ☞ பொதுச்சேவைகள்
- ☞ சர்வதேச அமைப்புக்கள்
- ☞ விளையாட்டுக்கழகங்கள்
- ☞ சங்கங்கள்
- ☞ வரலாற்றுச் சம்பவங்கள்

20) தனிநபரது சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ?

- ☞ குடும்பம்
- ☞ பாடசாலை
- ☞ சமூகநிறுவனங்கள்
- ☞ மதத்தாபனங்கள்

21) தனிநபரது சிந்தனையில்முதன் முதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணி ?

குடும்பம்

22) குடும்பச்சூழல் தனிநபரது சிந்தனையில் எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது ?

- ☞ எமது சிறுவயதில் குடும்பச் சூழல் சிறந்ததாகவும் அமைதியாகவும் இருக்குமனால் எம்மிடத்தில் சிறந்சிந்தனைகள் தோன்றுவதற்கு காரணமாகவும் முரண்பாடுகள், சிக்கல்கள் நிறைந்ததாக இருக்குமனால் எமது சிந்தனைகள் சீரற்றதாகவும் காணப்படும் இவ்வாறு எமது சிந்தனையில் குடும்பச் சூழலானது செல்வாக்குச் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23) சிந்தனைகள் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்துபவர்கள்?

☞ பெற்றோர், உறவினர்கள், மூத்தோர், அயலவர் ஆகியோரது செயற்பாடுகள் சிந்தனை மாற்றமடையக் காரணமாகின்றது.

24) தனியாளின் சிந்தனையில் பாடசாலையானது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என சுருக்கமாகக் குறிப்பிடுக?

☞ பாடசாலைச் சூழல்

☞ பாடசாலையில் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள்

☞ வகுப்பறைச் செயற்பாடு

☞ ஒழுங்கு விதிகள்

☞ புத்தகங்கள்

☞ சஞ்சிகைகள்

☞ பத்திரிகைகள்

☞ நூலகம்

☞ சக நண்பர்கள்

☞ ஆசிரியர் ஆகியோரின் செயற்பாடுகள் சிந்தனையில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. இதனைவிட பாடசாலையிச் நடைபெறும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்.

25) சிறந்த சிந்தனை பெற்றுக்கொள்ள வழி யாது என மார்க்ஷிம் குறிப்பிட்டுள்ளார்?

☞ புத்தகங்களை வாசித்தல் மூலம் இன்பதுன்பங்களைப்

☞ போக்கிக்கொள்ள உதவும் எனக குறிப்பிட்டுள்ளார்.

26) எவ்வாறான நூல்களை வாசிப்பதனால் சிந்தனையில் வளர்ச்சி ஏற்படுகின்றது?

☞ வரலாறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கதைகள்
- நாவல்கள்
- சமயநூல்கள்

27) மதசிந்தனைகளை ஏற்படுத்தும் நிறுவனங்கள்?
- விகாரை
- கோயில்
- பள்ளிவாசல்
- தேவாலயம்

28) சிறந்த சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?
- கற்றல் செயற்பாட்டில் ஈடுபடல்
- பாடசாலை நிகழ்வுகள்
- தொடர்புசாதனங்கள், பத்திரிகைகளில்
- நல்லவிடயங்களை பார்த்தல்
- ஆலய வழிபாட்டினை மேற்கொள்ளும் போது .
- அறிஞர்களின் புத்தகங்களை வாசித்தல்

29) சிந்தனைகளை குழப்பமடையச் செய்யும் காரணிகள்?
- கவர்ச்சியான விளம்பரங்கள்
- உணர்வுகளைத்தூண்டும் பாடல்கள்
- குடும்பப்பிளவு
- சமூக ஏற்றத்தாழ்வுகள்

30) சிறந்த சிந்தனையினை ஏற்படுத்தும் காரணிகள் ?
- சிறந்த நண்பர்கள்
- சறிந்த புத்தகங்கள் , சஞ்சிகைகள்
- சமயக்கோட்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை
- பெற்றோரும் குடும்பத்தினரும்
- சமூகப்பெரியார்கள்
- அறிஞர்கள்
- மதத்தலைவர்கள்.

31) சிந்தனைதொடர்பான எண்ணக்கருக்கள்?

- வாழ்கையில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சிந்தனைகள் வேறுபடுகின்றது.
- தனியாள் ஏவறுபாடுகளுக்கு ஏற்ப சிந்தனைகள் வேறுபடுகின்றது
- சிறந்தசிந்தனையினைப் பெற்றுக்கொள்பவன் வாழ்கையினைச் சிறப்புடையதாக மாற்றிக்கொள்கின்றான்
- சிறந்த சிந்தனையினைப் பெற்றுக்கொள்ள சூழலில்
- பல்வேறு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிகள்

1) சிந்தனையின் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துரைக்க?

2) உம்மிடம் காணப்படும் நல்ல சிந்தனைகள் எவை?

3) அறிவுள்ள நூல்களை வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

4) உமது வகுப்பறையில் மாணவர்களிடையே சிந்தனை வேறுபட்டுக்காணப்படுவதற்கான காரணங்கள் யாவை?

4) ஆலயங்களில் எமது சிந்தனை மாற்றத்தினை தூண்டும காரணிகள்?

5. உமது வகுப்பறையிலுள்ள மாணவர்களிடத்துக் காணப்படும் பொருத்தமான சிந்தனைகளைக் குறிப்பிடுக?

6) ஒருவனிடத்தில் பொருத்தமற்ற சிந்தனைகள் தோற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

7) பிரச்சினைகள் தோற்றம் பெறுவதில் சிந்தனை எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என வகுப்பறையில் கலந்துரையாடுக ? பட்டியல் படுத்துக?

9) சிறப்பான வாழ்கையினை அமைத்துக்கொள்வதற்கு நீர் பின்பற்றும் வழிமறைகளைக் குறிப்பிடுக?

10) உமக்கு இருக்கின்ற தனித்துவமான பண்புகளை அட்டவணைப்படுத்துக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) சமூகத்தில் தீய சக்தியினால் ஏற்படும் விளைவுகளைத் தருக?

12) வகுப்பறையிலுள்ள சக மாணவர்களின் வாழ்கை இலட்ச்சியத்தினை கேட்டறிந்து அட்டவணைப்படுத்துக?

13) தீயசக்திகளை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைப்போம் என்ற தலைப்பில் ஒரு சிந்தனைக் கட்டுரை வரைக?

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து சரியாயின் சரி எனவும்பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

1. சிந்தனைகள் காலத்திற்கு காலம் மாற்றமடையக் கூடியவை ஆகும் ( )

2. சிந்தனைகள் தனியாள் வேறுபாட்டிற்கேற்ப வேறுபடமாட்டாது ( )

3. சிந்தனை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாற்றமடையாது ( )

4. சிந்தனைகள் எல்லைகள் அற்ற தன்மை கொண்டவை ( )

5. தனிப்பட்டோரது சிந்தனைகள் அவர்கள்து எழுத்து ஆற்றல் என்பனவற்றுக்கமைவாக வெளிப்படுத்தப்படுகின்றது ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பிரச்சினைககள் யாவும் மனித உள்ளங்களிலிருந்தே தோற்றம் பெறுகின்றது ( )

7. வாழ்கைக்கு அர்த்தமில்லை என்பவன் மகிழ்ச்சியற்ற வாழ்கையை மேற்கொள்பவனாக இருக்கின்றான் ( )

8. சிறந்த சிந்தனைகள் மகிழ்ச்சியான வாழ்கையினைக் கொண்டு வருகின்றன ( )

9. வாழ்கையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன ( )

10. மத நிறுவனங்களோடு தொடர்புகளைப் பேணுவதனால் அறநெறிச் சிந்தனைகள் வளர்ச்சி அடைகின்றன ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு -2

# மனநிலைகளைப் பயனுள்ள விதத்தில் மாற்றிக் கொள்வோம்

1) மன எழுச்சி என்றால் என்ன?

☞ மனத்தின் செயற்பாட்டின் ஓர் அநுபவவகை மன எழுச்சி ஆகும்.

2) அடிப்படை மன எழுச்சிகள் எவை?

☞ மகிழ்ச்சி

☞ சினம்

☞ அச்சம்

☞ கோபம்

3) சினம் எழக்காரணங்கள்?

☞ விரும்பிய செயலில் தடை ஏற்படல்.

☞ சுதந்திர உடலியக்கம் கட்டுப்படுத்தப்படல்.

☞ பொருத்தாத கட்டுப்பாடுகள்.

☞ பசி.

☞ உடல் நலக்குறைவு.

☞ உறக்கமின்மை.

☞ தோல்வி அடைதல்.

4) அச்சம் எழக் காரணங்கள்?

☞ பெரும் சத்தம்.

☞ கற்பனைகள்.

☞ பயங்காட்டுதல்.

☞ கனவு காணுதல்.

☞ தண்டனைகள் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) ஒருவருக்கு கோபம் ஏற்படும்போது ஏற்படும் உடலின் வெளிப்பாடுகள்?

- ☞ உதடு, கை கால் நடுக்கம் ஏற்படல்
- ☞ முகம் சிவத்தல்
- ☞ முகத்தில் தசைகள் துடித்தல்
- ☞ சொற்கள் தடுமாறுதல்
- ☞ முறைத்தல்.

6) ஒருவருக்கு துக்கம் ஏற்படும்போது ஏற்படும் உடலின் வெளிப்பாடுகள்?

- ☞ கண்ணீர் வடித்தல்.
- ☞ கதறுதல்.
- ☞ கத்துதல்.
- ☞ முகம் சோர்வடைதல்.
- ☞ நெஞ்சில் அடித்துக்கொள்ளல்.
- ☞ மூச்சு வாங்குதல்.
- ☞ அமைதியாதல்.

7) ஒருவருக்கு பயம் ஏற்படும்போது ஏற்படும் உடலின் வெளிப்பாடுகள்?

- ☞ கண் பிதுங்குதல்
- ☞ சத்தம் போடுதல்
- ☞ கைகால் நடுங்குதல்
- ☞ ஓடுதல்.
- ☞ பேசுதலுக்கு கஸ்ரப்படுதல்.
- ☞ வாய் உளறுதல்.

8) ஒருவருக்கு மகிழ்ச்சி ஏற்படும்போது ஏற்படும் உடலின் வெளிப்பாடுகள்?

- ☞ சிரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆடுதல்.
- துள்ளிக் குதித்தல்.
- ஆரவாரம் செய்தல்.
- கோஷ மிடல்.

**9) அடிக்கடி மனநிலையினை மாற்றிக்கொள்வதனால் ஏற்படும் விளைவுகள்?**

- இரத்த அழுத்தம் ஏற்படும்.
- ஆஸ்துமா நோய் எற்படும்.
- உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும்.

**10) உளரீதியான தாக்கங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்?**

- மனநிலையினை அடிக்கடி மாற்றுதல்.
- இரத்தோட்டம் அடிக்கடி மனநிலை மாறுபடுவதனால் மாற்றம் அடைகின்றது இதுவும் உளரீதியா தாக்கத்திற்கு காரணமாகின்றது.
- மனநிலை மாறும்பொது வெட்கம், கோபம் அடையும் சந்தர்ப்பங்களில் உடலானது பல்வேறு பட்ட ஹோர்மோன்களைச் சுரப்பதனால் அவை உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உடல்ரீதியான தாக்கத்திற்கு காரணமாகின்றது.

**11) நல்ல மனநிலையினை ஏற்படுத்திக்கொள்வதற்கான வழிகள்?**

- துக்கம் ஏற்படும் போது கவலை அடையாது இருக்கப் பழகிக்கொள்ளல்
- கவலையடைந்து காலத்தை வீணாக்குவதை விட அர்த்தமான விடயங்களில் ஈடுபடல்

  **உதாரணம்** - உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் அமைவதற்கு காரணம் சாஜகான் எனும் சக்கரவர்த்தியின் மனைவி மும்தாஜ் இறந்ததுவே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கோபமடையும் போது அவ்விடங்களை விட்டு நகர்ந்து செல்லுதல்

☞ மனம்சாந்தம் ஏற்படும் இடங்களை நாடிச் செல்லுதல். **உதாரணம் - பூங்கா , ஓடைகளின் ஓரம் நீர்வீழ்ச்சிகள்,** அரசசபை, மெதுவான காற்று வீசும்கடற்கரையோரங்களில் இருத்தல்

☞ இயற்கையினை இரசித்தல்.

**12) வாழ்க்கையில் ஏற்படும் மகிழ்ச்சி கரமான சந்தர்ப்பங்கள்?**

☞ பிறநத தினம் கொண்டாடும் போது மகிழ்ச்சி ஏற்படல்.

☞ பரீட்சையில் உயர்ந்த பெறுபெற்றினைப்

☞ பெற்றுக்கொள்ளும் போது மகிழ்ச்சி ஏற்படல்.

☞ போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ளும் போது மகிழ்ச்சி ஏற்படல்.

**13) எமது மனச் சுமைகளைக் குறைத்துக்கொள்வதற்கான வழிகள்?**

☞ மனதை ஒருநிலைப்படுத்திக்கொள்ள முயற்ச்சி எடுத்தல்.

☞ ஓய்வாக இருக்கும்கோது சூழலைப்பற்றிச் சிந்தித்தல்.

☞ சூழலில்காணப்படும் ஒலி வேறுபாடுகளைச் சிந்தித்தல்.

☞ நல்ல எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் மனதில் ஏற்படுத்திக்கொள்ள பழகிக்கொள்ளல்.

**14) மனநிலைமையினைக் கட்டுப்படுத்தாமையினால் ஏற்படும் பிரச்சினைகள்?**

☞ மனிதர்கள் தம்மிடையே சண்டைபிடித்தல்.

☞ சொத்துக்களை நாசம் செய்தல்.

☞ கொலை செய்தல்.

☞ மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரக்கமில்லாது மிருகத்தனமான செயல்களில் ஈடுபடல்.
- புரிந்துணர்வுடன் செயற்படாது இருத்தல்.
- தற்கொலை முயறச்சியில் ஈடுபடல்.
- சமூக விரோதச் செயல்களில் ஈடுபடல்.
- போதைப்பொருட்களைப் பாவித்தல்.
- எதிர்கால வாழ்கையினை நாசமடித்துக்கொள்ளல்.
- பஞ்சமாபாதகங்களில் ஈடுபடுதல்.

**15) சமூகத்தில் எம்மீது அன்பு, ஆதரவு, கௌரவம் ஏற்படுவதற்கு நாம் செய்யவேண்டியவை?**

- மனநிலைகளை நல்ல முறையில் மாற்றிக்கொள்ளுதல்
- உணர்வுபூர்வமான விடயங்களுக்கு உடனடியாக செயற்படுவதனைத் தவிர்த்துக்கொள்ளுதல்.
- உடற்சமநிலையினை ஏற்படுத்திக்கொள்ளல்.
- பிறரை மகிழ்விக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுதல்.
- சமூகம் ஏற்றுக்கொள்ளும் செற்பாடுகளில் ஈடுபடுதல்.
- பிறருக்கு உதவும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ளல்.
- சமூகத்திலுள்ள பண்பாடு கலாசாரங்களை மதித்து நடத்தல்.
- பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுவதனை தவிர்த்துக் கொள்ளல்.
- சமூக நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- நல்ல கருத்தாளம் உடைய விடயங்களை வெளிப்படுத்துதல்.

**16) தனியாள் வேறுபாடுகள் இனம்காண்பது எவ்வாறு?**

- பிறழ்வான பொருத்தப்பாடுடையோர்.
- மீத்திறன் உடையோர்.
- உடற்குறைபாடுடையோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ உளக்குறைபாடுடையோர்.
- ☞ நெறிபிறழ்வு.
- ☞ கல்வியில் பிற்போக்கு ஏற்படல்.

இவர்களின் திறன்கள், விருப்பம். மன எழுச்சி, உணர்வுகள், பண்புகள், மனப்பாங்கு, என்பன வேறுபாடுடையதாகக் காணப்படும்.

**17) தனியாள் வேறுபாடு என்றால் என்ன?**

- ☞ குறிப்பிட்ட இருவர் எந்த விதத்திலும் சமமானவர்கள் இல்லை என்பது தனியாள் வேறுபாடு ஆகும்.

**18) நெறிபிறழ்வான நடத்தைகளுக்கான காரணங்கள்?**

- ☞ வீட்டில் ஒழுங்கான பராமரிப்பும் கட்டுப்பாடும் இல்லாமை.
- ☞ உளவியல் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் ஏற்படும் தீவிர மன முறிவுகள்.
- ☞ குறைந்த நுண்மதியும் கல்வியில் பிற்போக்கும் காணப்படுதல்.
- ☞ குடும்பவரலாற்றில் குற்றம் புரிதல். அளவுக்கு அதிக இயல்பூக்கத்தன்மை பாலுக்கம். திரட்டூக்கம், தன்னெடுப்பூக்கம் முதலியன காணப்படுதல்.

**19) பிறழ்வான பொருத்தப்பாடுடையோரின் நடத்தை அறிகுறிகள் யாவை?**

- ☞ வன்செயலில் ஈடுபாடு காணப்படுதல்.
- ☞ தொல்லை கொடுத்தல்.
- ☞ அதிகபொய் சொல்லுதல்.
- ☞ தனிமையில் இருத்தல்.
- ☞ எதிர்ச் செயல்களில் ஈடுபடல்.
- ☞ பின்னோக்கம் காணப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) பிறழ்வான பொருத்தப்பாடுடையோரின் உடலியல் அறிகுறிகள்யாவை?

- நகம் கடித்தல்.
- அமைதியின்மை காணப்படுதல்.
- உணவு சேமிக்காமை.
- முகம் சுளித்தல்.
- அழுதல்.
- வாந்தி எடுத்தல்
- திக்கி திக்கிப் பேசுதல்.

21) உளத்தாக்கம் என்றால் என்றால் என்ன்?

- மனதில் அமைதியற் நிலை ஏற்படும்போது உடல்நடுக்கம்,வாய்வரட்சியாதல் , பேசமுடியாத நிலை, வசனம் மறந்து போகும் நிலை போன்ற வெறுப்பான நிலை ஏற்படுவதே உளத்தாக்கம் என வரையறை செய்வார்.

22) உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும் உளத்தாக்கங்கள்?

- தீடிர் மரணம் ஏற்படுதல். ( மரணமடைந்த செய்திகேட்டு மனநிலையினை வெளிப்படுத்தும் போது அறியலாம்)
- பாரிய பண நட்டம் இடம்பெறல்

23) உளத்தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணிகள்?

- நாம் வாழும் சூழல்.
- வேலை செய்யும் இடங்கள்.
- சமவயதுக் குழு.
- போக்குவரத்துப்பாதைகள்.
- இயற்கை அனர்த்தங்கள்.
- நோய் ஏற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) உளத்தாக்கங்கள் தொடர்ச்சியாக ஏற்படும்போது ஏற்படும் விளைவுகள்?

- தூக்கமின்மை.
- உணவில் விருப்பமின்மை.
- தலைவலி.
- சஞ்சலம்.
- விரக்தி.

25) உளத்தாக்கத்தினை பயனுள்ள வித்தில் மாற்றிக்கொள்ள கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள்?

- மனக்கலக்கம் ஏற்பட்டிக்கும்போது பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தல்.
- சத்தத்துடன் பாடலோன்றைப்பாடுதல்.
- நல்ல பத்திரிகை, புத்தகங்களை வாசித்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- சித்திரம் வரைதல்.
- விளையாட்டு நடவடிக்கையில் ஈடுபடுதல்.
- நீந்துதல்.

26) உளத்தாக்கத்திலிருந்து விடுபட்டு மனஅமைதியினைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள்?

- சமய அனுட்டானங்களை மேற்கொள்ளுதல்.
  உதாரணம் - பௌத்தபிக்குகளின் போதனைகளைக் கேட்டல்.
- விகாரைகளைச் சுத்தம் செய்தல்.
- தியானம் செய்தல்.
- தேவாலயங்களில் பாடல்களைக் கேட்டல்.
- கோயில்களில் தேவாரம் பாடுதல்.
- நேரத்திற்கு வேலைகளைச் செய்து முடித்தல்.
- வேலைகளைப் புரிந்துணர்வுடன் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆயத்தங்களை திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.
- எமக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்தல்.
- தன்னம்பிக்கையினைக் வளர்த்துக்கொள்ளுதல்.
- பல வேலைகளை ஓரே நேரத்தில் செய்வதை தவிர்த்துக்கொள்ளுதல்.
- தொடர்ச்சியாக வேலையினை மேற்கொள்ளாது ஓய்வெடுக்கப் பழகுதல்.
- வேலைகளைப் பகிர்ந்து செய்தல்.
- முதியோர்களுடைய ஆலோசனைப்படி நடந்து கொள்ளுதல்.
- பொருத்தமறற் செயல்களை செய்யாது நிறுத்துதல்.

**26) உளத்தாக்கமின்றி வாழ்கையினை அமைத்துக் கொள்வதற்கான வழிகள்?**

- முன்ஆயத்தம் செய்தல் - எந்தவோரு வேலையையும் திட்டமிட்டு மேற்கொள்ளல்.
- நேர சூசிப்படி வேலை செய்தல்.
- பிறரின் ஆலோசனையை வைத்துக்கொண்டு வேலைகளைச் செய்தல்.
- இறைசிந்தனையினை ஏற்படுத்தல்.
- புரிந்துணர்வினை வளர்த்துக்கொள்ளுதல்.

**27) உளத்தாக்கத்திலிருந்து விடுபடுவதனால் ஏற்படும் நன்மைகள்?**

- சமநிலையான ஒரு வாழ்கையினை அமைத்துக் கொள்ள முடிதல்.
- புன்னகை முகத்தை அடைந்து கொள்ள முடிதல் .
- இலகுவான நடைமுறைகளுக்கேற்ப வாழ்கையினை அமைத்துக்கொள்ள முடிதல்.
- மற்றவர்களுக்கு இடையூறினை ஏற்படுத்தமாட்டீர்கள்.
- சமூகத்துடன் சந்தோஷமாக செயற்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நேர்மையானவராக இருக்க முடியும்.
- மனிதநேயத்துடன் வாழ்கையினை அமைத்துக் கொள்ளல் .
- கௌரவமாக வாழ முடிதல்.
- வாழ்கையில் இலட்ச்சியத்தினை அடைந்துகொள்ள முடிதல்.

## பயிற்சிகள்

1) கோபம் ஏற்படுவதனால் ஏற்படும் விளைவுகள் நான்கு தருக?

2) நல்ல மன எழுச்சியினால் ஏற்படும் நன்மைகள் எவை?

3) ஆபத்தான மன எழுச்சியினால் ஏற்படும் விளைவுகள் எவை?

4) பாடசாலையில் பின்பற்றப்படும் மன எழுச்சியோடு தொடர்புடைய விழுமியங்கள் எவை?

5) நீங்கள் பின்பற்றவேண்டிய மன எழுச்சிசார் விழுமியப்பண்புகளைக் குறறிப்பிடுக?

6) நீங்கள் விருத்தி செய்து கொள்ளவேண்டிய மன எழுச்சிப்பண்புகள் மூன்று தருக?

7) பயங்கொள்வதனால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

8) மனநிலைகளை பயனுள்ளதாக மாற்றியமைக்கக் கூடிய வழிகளைக் குறிப்பிடுக?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) உளத்தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக?

10) உமக்கு வெட்கம் ஏற்பட்டால் நீர் வெளிப்படுத்தும் வெளிப்பாடுகளைக் குறிப்பிடுக?

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக**

1) கோபம் வரும்போது முகம் சிவத்தல் உடலினால் வெளிப்படுத்தப்படும் வெளிப்பாடு ஆகும் ( )

2) மனநிலைகள் வாழ்வில் கட்டயமாக வெளிவராது இருக்கும் ( )

3) மனதினில் தோன்றும் வெறுப்பான நிலையினை உளத்தாக்கம் என அழைப்பர் ( )

4) மனக்கலக்கம் அடைந்திருக்கும் போது சத்தமிட்டுப் பாடல்களைப் பாடுவது மனக்கலக்கத்திலிருந்து விடுபடுவதற்கான வழியாகும் ( )

5) சமய அனுட்டானங்களைப் பின்பற்றுவதனால் உளத்திற்கு அமைதி கிடைக்கின்றது ( )

6) வாழ்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் துன்பியல் நிகழ்வாகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) கண் பிதுங்குதல் பயத்தின் அறிகுறியாகும் ( )

8) உலக அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மஹால் காணப்படுகின்றது ( )

9) உலகில் பெரும்பாலான பிரச்சினைகள் தோன்றுவதற்கு மனநிலையைக் கட்டுப்படுத்தாமையே காரணமாகும் ( )

10) மனதை அமைதியாக வைத்துக்கொள்வதற்கு பயிற்சிகள் அவசியமானதாகும் ( )

11) நாம் வாழுகின்ற காலத்திற்குள் நாம் அனைவரும் பல்வேறுவகையான மன நெருக்குதலுக்கு ஆளாகின்றோம். . ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 3
## புரிந்துணர்வுடன் செயற்பட்டு முரண்பாடுகளைத் தவிர்ப்போம்.

1. முரண்பாடு என்றால் என்ன?

☞ முரண்பாடு என்பது இசைவான ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாமல் உள்ள நிலமையாகும் அதாவது ஒருவர் ஒருவிடயம் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கிடையில் இசைவான ஒரு தீர்மானத்திற்கு வர முடியாமல் தத்தளிக்கும் ஒரு நிலையே முரண்பாடாகும்

☞ முரண்பாடு தனியாட்களுக்கிடையே வேற்றுமை அதிகரிப்பினாலும் சமூகவேறுபாடுகளினாலும் ஏற்படும் சச்சரவு அல்லது பிணக்கு முரண்பாடு ஆகும்.

☞ முரண்பாடுகள் ஏனையோரைத் துன்புறுத்துகின்ற அல்லது காயப்படுத்துகின்ற அல்லது தீங்கிழைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

2. முரண்பாடுகள் ஏற்படும் வகைகள்?

☞ ஒருவருக்குள்ளேயும்

☞ ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடையேயும் ஏற்படும்

3) மனிதன் எவற்றோடு முரண்பட்டுக்கொள்கின்றான்?

☞ மனிதன் தனக்குள்ளேயும்

☞ இயற்கையோடும்

☞ இனங்களுக்கிடையேயும்

☞ நாடுகளுக்கிடையேயும்

☞ இயற்கையோடும் முரண்பட்டுக் கொள்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) முரண்பாட்டின்காரணமாக மனிதரிடையே தோன்றும் தோற்றப்பாடுகள்?

☞ சண்டை , கோபம், பாகுபாடு, கீழ்படியாமை, கவலை, பயம், மற்றவரைத்துன்புறுத்தல், வெறுப்பு, கடும்சொல் பேசுதல் புறக்கணித்தல்.

5) ஆதிகால மனிதன் முரண்பட்டுக்கொண்டவிடயங்கள்?

☞ தனது குடும்பத்தொடும் அயலவர்களோடும் பின்வருவனவற்றுக்காக முரண்பட்டுக்கொண்டான்

☞ கால்நடைகளை அபகரித்தல்.

☞ காணிகளின் பரப்பளவை விஸ்தரித்தல்.

☞ சாதி, சமயம், கலாசாரம், மொழி என்பவற்றுக்காக முரண்பட்டுக்கொண்டான்.

6) முரண்பாடுகள் உருவாவதும் அதற்குள் பல்வேறு சந்தர்ப்பம் காணப்படுமாற்றினை பின்வரும் வரைபடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் ?

| முரண்பாடு உருவாகக் காரணம் | மாற்றங்களால் பெற்றுக்கொண்ட பயன் ( சர்தர்ப்பங்கள் ) |
|---|---|
| சவால் | ஆதிகாலத்தில் மனிதனுக்கு வனவிலங்குகள மற்றும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெறும் சவால் இருந்தமை. |
| முரண்பாடு | பாதுகாப்புச் சம்பந்தமாக தமக்குள்ளும் குழுவைச் சேர்ந்த பிற அங்கத்தவர்களிடையேயும் மனப்போராட்டம் உருவாகியது |
| சந்தர்ப்பம் | வனவிலங்குகளிடமிருந்து தம் உயிரைக்காப்பாற்றவும் தாக்குவதையும் தவிர்க்க நேரிட்டமை. |
| மாற்றம் | பாதுகாப்பிகாக அறிவைப்பயன்படுத்தி தந்திரோபாயங்களைக் கையாளல், ஆயுதங்களை உருவாக்கல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) முரண்பாடுகள் ஏற்படுவதனால் ஏற்படும் சாதகமான விளைவுகள் உதாரணங்களுடன் ?

- ☞ ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையடன் முரண்பட்டுக்கொண்டதன்விளைவால் நெருப்பினைக் கண்டுபிடித்தான் இச்செயற்பாட்டினால் பிற்காலங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு காரணமாகியது.
- ☞ ஆதிகாலத்தில் மிருகங்களிடமிருந்து தம்மைபாதுகாத்துக் கொள்வதற்காக கூடாரங்களையும் ஆயுதங்களைுய் உருவாக்கிக் கொண்டமை.
- ☞ மனிதன் தனது பாதுகாப்புக்கருதி விலங்குகளை பிடித்த வளர்த்து வந்தமை.

8) முரண்பாடுகளால் ஏற்படும் பாதகமான விளைவுகள்?

- ☞ வன்முறைகள்
- ☞ உயிர்ச்சேதங்கள் - முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களினால் ஏற்பட்ட அழிவுகள்.பாரிய சொத்தழிவுகள் இரண்டாம் உலகமகாயுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகள் இதற்கு உதாரணமாகும். அதாவது இரண்டாம் உலகமகாயுத்தத்தில் யப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்டமையானது அந்நாட்டின் பல இலட்சக்கணக்கான மக்கள்உயிர் இழந்ததுடன் சொத்துக்களும் குறிப்பிடத்தக்கதாகும்.

9) சமூகத்தில்காணப்படும் முரண்பாட்டு வகைகள்?

- ☞ எளிய முரண்பாடுகள்.
- ☞ சிக்கலான முரண்பாடுகள்.
- ☞ வன்முறையுடன் கூடிய முரண்பாடுகள்.
- ☞ வன்முயையற்ற முரண்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) முரண்பாடு ஏற்படும் இடங்கள் ?

- ☞ குடும்ப அங்கத்தவரிடையே ஏற்படல்.
- ☞ குடும்ப அலகுகளுக்கு இடையே.
- ☞ இனங்களுக்கிடையே முரண்பாடு ஏற்படல்
- ☞ வேலைஉலகினுள்ஆளணியினருக்கும் வழங்குநருக்குமிடையில் ஏற்படுதல்
- ☞ இரு நாடுகளுக்கு இடையில் முரண்பாடு ஏற்படல்
- ☞ தேச எல்லைக்காக முரண்பாடு ஏற்படல்
- ☞ உழைப்பிற்கேற்ப ஊதியம் வழங்காமையினால் முரண்பாடு ஏற்படல்.
- ☞ பாடசாலையில் ஆசிரியரக்கும் மாணவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்படல்.

10) வன்முறை என்றால் என்ன?

- ☞ முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்காதவிடத்து ஏற்படுவது வன்முறையாகும்.

11) வீடுகளில் முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?

- ☞ பெற்றேறாரிடமிருந்து பெறுகின்றவை குறித்து சகோதர சகோதரிகளிடையே பொறாமை போட்டி ஏற்படல்.
- ☞ பெற்றோருடன் பிள்ளைகள் எதிமறையாக முரண்படல்.
- ☞ பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பிரிக்கப்படல்.
- ☞ தாய்தந்தையர்களுக்கு இடையிலான முரண்பாடு குடும்ப உறுப்பினர் ஒருவரை பழி சுமத்தல்.
- ☞ குடும்ப உறுப்பினர் ஒருவரை ஒருவர் பழி சுமத்தல்.
- ☞ சிறுவர்கள் மீது துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளல்..
- ☞ நண்பர்களைச் சந்திப்பதற்கும் விளையாடுவதற்கும் சுதந்திரம் மறுக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள்?

- புரிந்துணர்வின்மை.
- பாகுபாடு காட்டல்.
- விளக்கமின்மை.
- பொறாமை கொள்ளல்.
- பிறர் கருத்துக்கு மதிப்பளிக்காமை.
- சந்தேகம் ஏற்படல்.
- மதிப்பளிக்கப்படாதபோது.
- பிறரின் ஏளனத்திற்கு உள்ளாகும் போது.
- தவறான தீர்ப்புக்குள்ளாகும் போது.
- ஏமாற்றம் ஏற்படுதல்.
- உரிமைகள் இழக்கப்படும் போது.
- அநீதியான தண்டனைகளுக்கு உட்படுதல்.
- விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கின்மை..
- ஏற்றத்தாழ்வு பார்த்தல்.

12) மோதல் என்றால் என்ன?

- ஒரு செயலை ஏற்றுக்கொள்ளும் ஒரு பிரிவினருக்கும் எதிரான கருத்தைக்கொண்ட மற்றொரு பிரிவினருக்கும் இடையில் ஏற்படுவது மோதல் ஆகும் முரண்பாடுகளே மோதல்களாக உருவாகின்றது,

13) மோதல்கள் ஏற்படும் விதத்தினைக் குறிப்பிடுக?

- தனிநபர் இருவருக்கிடையில்.
- இரு குழுக்களிடையே.
- இரு நாடுகளுக்கிடையே.
- உலக நாடுகளுக்கிடையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) மோதல்கள் ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?

☞ இழந்த ஒரு பொருளைப் பெற்றுக்கொள்வதற்.காக
☞ இழக்கவிருக்கும் உரிமை தொடர்பாக .
☞ இருவருக்கிடையில் ஏற்படும் கருத்துமோதல்.
☞ தேச எல்லையினைப் பிரித்துக்கொள்வதற்கு.
☞ சுயமான ஆட்சியினைப் பெற்றுக்கொள்ள.
☞ நடைமுறை ஆட்சியினை மாற்றியமைக்க.
☞ நிலத்தை சொந்தமாக்கிக்கொள்ள.
☞ ஆதிக்கத்தினை நிலை நாட்டிக்கொள்ள.

15) முரண்பாடோன்று விருத்தியாகும் படிமுறைகள்?

☞ மனக்குறை ஏற்படல்.
☞ யாதேனும் ஒரு சம்பவம் நடைபெறல்.
☞ தவறாகப்புரிந்து கொள்ளல்.
☞ அமைதியின்மை ஏற்படல்.
☞ நெருக்கடி நிலை ஏற்படல்.

16) மனக்குறை எவ்வாறு ஏற்படுகின்றது?

☞ உரிமைகள் இழக்கப்படும் நேரத்தில்.
☞ தவறான தீர்ப்புக்குள்ளாதல்.
☞ தனித்துவத்தை மதிக்காமை.
☞ ஏதாவது கொடுமைகள் இழைக்கப்படும் போது ஏற்படும்.

17) மனக்குறைகள் ஏற்படும் இடங்கள்?

☞ குடும்ப அங்கத்தவர்களிடையே.
☞ அயலவர்களுக்கிடையில்.
☞ இனங்களுக்கிடையில்.
☞ நாடுகளுக்கிடையில்.
☞ இரு குடும்பங்களுக்கிடையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) தவறாகப்புரிந்துகொள்ளக் காரணங்கள் ?

- குறிப்பிட்ட நபரிடையே மனக்குறைகாணப்படும்போது நாம் செய்கின்ற சிறு தவறும் பெரிதாகக் தெரிவதனால் இது ஏற்படுகின்றது.

19) தவறாகப்புரிந்து கொள்ளுதல் என்றால் என்ன?

- ஒரு சம்பவம் நடைபெற்றதை மையமாக வைத்து ஒருவரை ஒருவர் சந்தேகம் கொண்டு பார்ப்பதனாலும் கருத்துக்கள் முரண்பட்டுக் காணப்படுவதனாலும் தவறாகப்புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

20) அமைதியின்மை ஏற்படுவதற்கான காரணங்கள்?

- தவறாகப்புரிந்து கொள்ளல்.
- மனக்குழப்பம் ஏற்படல்.
- விரக்தி ஏற்படல்.

21) பாடசாலையில் மாணவர்களிடையே முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?

- சக மாணவர்கள் மீது பட்டப்பெயர் சூட்டுதல்.
- மற்றையமாணவர் மீது பழிசுமத்தல்
- மாணவர்களுக்கு இடையிலும் மாணவ குழுக்களுக் கிடையிலும் சண்டைகள் ஏற்படல்
- மாணவர்கள் - ஆசிரியர்கள் புரிந்துணர்வு இல்லாதிருத்தல்.
- பொருத்தமான நண்பர்கள் கிடைக்காமையினால் வகுப்பில் தனிமைப்படல்..

22) முரண்பாட்டை தவிரப்பதற்கான வழிவகைகள்?

- விடயங்களை சரியாகப் புரிந்து கொள்ளல்
- பகிரங்கமான கருத்துப் பரிமாற்றம்.
- காரணத்தோடு விடயங்களைச் சமர்ப்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ மறு தரப்பினருக்கு செவிமடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

☞ காரணத்தோடு சமர்ப்பித்த விடயங்களை ஏற்றுக்கொள்ளல்.

☞ சுயகௌரவம் பாதுகாக்கப்படல்.

☞ சரியான தீர்மானம் எடுத்தலும் அதனை நடைமுறைப் படுத்தலும்.

**23) மோதல்கள் ஏற்படுவதனால் விளைவுகளைக் குறிப்பிடுக?**

☞ நட்புக்கு பங்கம் ஏற்படல்.

☞ பொதுமக்கள் மரணத்தை தழுவுதல்.

☞ பௌதீகச் சொத்துக்கள் நாசமடைதல்.

☞ நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைதல்.

☞ சூழல் மாசடைதல்.

☞ வாழ்கைச் செலவு அதிகரித்தல்.

☞ நாட்டின் பாதுகாப்பிற்கு அதிகளவு நிதிகளைச் செலவழித்தல்.

☞ நாட்டின் அபிவிருத்தி சீர்குலைதல்.

☞ நாட்டின் கல்வி நடவடிக்கை சீர்குலைதல்.

☞ அநாதைகள், அங்கவீனர்கள் தோற்றம் பெறல்.

**24) முரண்பாடுகள் ஏற்படாது இருப்பதனால் ஏற்படும் நன்மைகள்**

☞ தன்னம்பிக்கை விருத்தியடையும்.

☞ உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படல்.

☞ பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படல்.

**25) சமாதான மனிதனாக வாழ கடைப்பிடிக்கவேண்டிய பண்புகள்?**

☞ நேர்மையாக இருக்கவேண்டும்.

☞ மோதல் அற்றவராக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புரிந்துணர்வு கொண்டவராக இருக்கவேண்டும்..
- மற்றவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குபவராக இருத்தல் . வேண்டும்.
- மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவராக இருக்கக் கூடாது.
- பொறுமை கொண்டவராக இருக்கவேண்டும்
- பண்பாளராக இருக்கவேண்டும்.
- பிறரை மதிப்பவராக இருக்கவேண்டும்.

26) இணக்கப்படுதல் என்றால்?

- கருத்து மோதல்கள் ஏற்பட்ட இருவரது பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வினை முன்வைத்து இணக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ளல் இணக்கப்படுதல் எனப்படும்.

27) முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு குடும்பத்தினால் மேற்கொள்ள வேண்டிய பணிகளைக் குறிப்பிடுக?

- குடும்ப நபர்களிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தல்.
- முன்மாதிரியான பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளல்.
- ஒற்றுமையினைக் கட்டியெழுப்பக் கூடிய பண்பினை வளர்த்தல்.
- மற்றவரின் கருத்துக்களை சகித்துக்கொள்ளும் பண்பினை வளர்த்தல்.
- மற்றவருக்கு உதவி செய்யும் பழக்கத்தினை ஏற்படுதிக்கொள்ளல்.

27) முரண்பாட்டினைத் தீர்ப்பதற்காக நமக்குள் விருத்திசெய்ய வேண்டிய பண்புகள் திறன்களைக் குறிப்பிடுகுக?

- அவதானமாகச் செவிமடுத்தல்.
- உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது பொறுமையாகச் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ உள்நோக்கங்கள் இன்றி விசுவாசமாகச் செயற்படல்.
- ☞ தூரநோக்குடன் தீர்மானம் எடுத்தல்.
- ☞ சிறந்த முறையில் மானிட இடைத்தொடர்புகளை பேணல்.
- ☞ பிறரிடம் கருத்துக்களைக் கேட்டல்.
- ☞ பிறரின் கருத்துக்கு மதிப்பளித்தல்.
- ☞ சாதகமாச் சிந்தித்தல்.
- ☞ காரணத்தோடு சமர்ப்பிக்கும் விடயங்களை ஏற்றுக்கொள்ளல்.
- ☞ நெகிழ்ச்சித்தன்மையினைக் கொண்டு காணப்படல்.
- ☞ உறுதியாகவுத் திடமாகவும் செயற்படல்.

## பயிற்சிகள்

1) மாணவர்கள் குழக்களாக இயங்கும்போது முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்களை பட்டியல் படுத்துக?

2) முரண்பாட்டினைத் தோற்றுவிக்கும் காரணிகளைக் அட்டவணைப் படுத்துக?

3) தொழில் நிறுவனங்களில் முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ?

4) முரண்பாட்டிலிருந்து மீள நீர் மேற்கொள்ளும் வழிகளைக் குறிப்பிடுக?

5) கூட்டுக் குடும்பத்தில் அதிகளவாக முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) முரண்பாடு ஏற்படுவதற்கு புரிந்தணர்வின்மை ஒரு காரணமாகும் ( )

2) குழுக்களிடையேயும் முரண்பாடுகள் ஏற்படுகின்றது ( )

3) முரண்பாடு விருத்தியடைவதற்கு தவறாக சிலரை விளங்கிக்கொள்வதும் பிரதான காரணியாகும் ( )

4) விடயங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதால் முரண்பாட்டைத் தவிர்த்துக் கொள்ளலாம் ( )

5) முரண்பாடு என்பது இணக்கமான நிலைக்கு வரமுடியாமல் உள்ள ஒரு நிலை ஆகும் ( )

6) முரண்பாடுகள் மோதல்களாக மாறுகின்றது ( )

7) முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பல திறன்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் ( )

8) உறுதியாக இருப்பதனால் முரண்பாட்டினைக் குறைத்துக் கொள்ளலாம் ( )

9) முரண்பாட்டின் காரணமாக நடத்தையில் பல்வேறு தோற்றப் பாடுகள் ஏற்படுகின்றது ( )

10) முரண்பாடுகள் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 4

## சிறந்த தலைவர்களாவோம்

1) தலைமைத்துவம் என்றால் என்ன?

☞ கூட்டுச் செயற்பாட்டின் மூலம் தமது நோக்கங்களை அடைந்த கொள்வதற்காக நபர் ஒருவர் தமது குழுவில் உள்ள அங்கத்தவர்களை வழி நடத்துதல் தலைமைத்துவம் ஆகும்.

2) தலைமைத்துவம் தோற்றம் பெற்றமைக்கான காரணம்

☞ மனிதன் பிறருடன் கூட்டு சேர்ந்து வாழும் நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டதன் விளைவாக தலைமைத்துவம் தோன்றியது எனலாம்.

3) நடைமுறைவாழ்கையில் தலைமைத்துவமானது காணப்படும் இடங்கள்?

☞ குடும்பம்.

☞ பாடசாலை.

☞ சமூக நிறுவனங்கள்.

☞ கோயில்கள்.

☞ விளையாட்டு கழகங்கள்.

☞ சமவயதுக்குழுக்கள்.

4) தலைமைத்தவத்தின் அவசியங்கள்?

☞ ஒரு குழுவினரின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதன் அங்கத்தவர்களை வழிநடத்துவதற்கு தலைமைத்துவம் அவசியம்.

☞ சமூகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ பொதுதேவைகளை ஒழுங்கு படுத்தி இயங்கச் செய்வதற்கு அவசியம்.
- ☞ எதிகால சமூகத்தினை வழிநடத்த தலைமைத்துவம் அவசியமாகும்.

## 5) தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள்?

- ☞ ஒரு சமூகத்தின் அடித்தளம் அதன் தலைமைத்துவத்தின் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது
- ☞ உங்களுக்கு நீங்களே தலைவராக இருங்கள் .
- ☞ ஒரு சமூகத்தின் தலைவர் அம்மக்களின் சேவகர் ஆவார்.
- ☞ உரிய நோக்கங்களை அடைவதற்காக பின்பற்றுவோரை வழி நடத்தவும் அவர்களால் செய்ய முடியாதவற்றைச் செயற்படுத்துவதற்கும் தலைமைத்துவவத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

- ☞ தலைமைத்துவம் என்பது தனிப்பட்டோருக்கும் குழுக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பின் மூலம் பொதுவான குறிக்கோள்களை அடைவதற்கு வழிகாட்டலை மேற்கொள்வதாகும்.

## 6.) தலைமைத்துவத்தின் பண்புகள்?

- ☞ ஆளுமையுடன் செயற்படுதல்.
- ☞ குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படுதல்.
- ☞ பொறுப்புக்களை செவ்வனவே நிறைவேற்றுதல்.
- ☞ உணர்ச்சி வசப்படாது இருத்தல்.
- ☞ உறுதியான தீர்மானங்களை எடுத்தல்.
- ☞ தவறுகளைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளல்.
- ☞ பிறருடன் நல்லுறவைப் பேணல்..
- ☞ பொது நலனில் அக்கறையாக இருத்தல்.
- ☞ பக்கச்சார்பின்றி நேர்மையாக நடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அர்ப்பண சிந்தனையுடன் செயற்படுதல்.
- நன்றாக செவிமடுத்தல்.

7) **தலைமைத்துவப்பண்பினை வளர்த்துக்கொள்வதற்கான வழிகள்?**

- கல்வி கற்கும்போது பிறருடன் சேர்ந்து குழுவாகச் செயற்படல்
- பாடசாலையில் வகுப்பறை வேலைகளை ஒழுங்காகச் செய்தல்.
- பாடசாலைகளில் குழுவாகச் செயற்பட்டு கல்வி கற்றல்.
- மாணவர் மன்றங்களில் தலைமைவகித்து செயற்படுதல்.
- விளையாட்டுப்போட்டிகளில் தலைமை வகித்தல்.
- பணியும் பண்பினை வளர்த்துக்கொள்ளல்
- பிறருக்கு உதவும் பண்பினைப் பின்பற்றல்.
- திட நம்பிக்கையினைக் கொள்ளல்.
- நேர்மையாக இருத்தல்.
- பிறரையும் பிறருடைய கருத்துக்களையும் மதித்தல்.
- மன உறுதி, பயிற்சி, அர்ப்பண சிந்தனை என்பவற்றைப் பின்பற்றல்.
- பெற்றோர், ஆசிரியர்கள் , மூத்தோர் ஆகியோரது அறிவுரைகளைக் கேட்டல்.

8) **தலைமைத்துவத்தின் பல்வேறு வடிவங்கள்?**

- ஏகாதிபத்திய தலைவர்கள்.
- ஜனநாயகத் தலைவர்கள்.
- தராண்மைத்தலைவர்கள்.

9) **ஏகாதிபத்திய தலைவர்களின் பண்புகள்?**

- தானே தனி முவவு எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ தனக்கு ஏற்ற குழுவினருடன் முடிவுகளைச் செயற்படுத்தல்.
- ☞ குழுக்களின் கருத்தை கவனத்தில் எடுப்பதில்லை.
- ☞ தன்னைப் பின்பற்றுவோரை மதிப்பதில்லை.
- ☞ சர்வதிகார ஆட்சியாகக் காணப்படும்.
- ☞ மக்களின் நலன்கள் பேணப்படுவது மிகக்குறைவாக இருக்கும்.

**10) ஜனநாயகத் தலைவர்களின் தலைமைத்துவப்பண்புகள்?**

- ☞ கலந்தரையாடல் மூலம் தீர்வினை மேற்கொள்ளவர்.
- ☞ குழு உறுப்பினர்களுக்கு தலைமைத்துவத்திற்கான பங்களிப்பினை வழங்குவர்.
- ☞ கூட்டாகத் தீர்மானங்களை எடுப்பர்.
- ☞ மக்கள் நலன்களை பேணும் நடவடிக்கையில்
- ☞ அதிக ஆர்வம் காட்டுவர்.
- ☞ மக்களது பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பர்.
- ☞ உரிமைகள் மதிக்கப்பட்டொரு ஆட்சியினை மேற்கொள்ளவர்.
- ☞ பிரதேசரீதியான பிரதிநிதிகள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவர்.

**11) தாரண்மைத்தலைவர்களின் தலைமைத்துவப் பண்புகள்?**

- ☞ சுயாதினமாக செயற்பட முடியும்.
- ☞ சுயாதினமாக தீர்மானங்களை எடுக்க முடியும்.
- ☞ எல்லா உறுப்பினர்களது கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படும்..
- ☞ சுயாதீன முடிவுகளால் குழப்பம் ஏற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) இந்திய சுதந்திரப்போராட்டத்தில் தலைமைத்துவத்தை அகிம்சைவழியில் வெற்றிகண்ட உலகின் சிறந்த தலைவர் யார்?

☞ மகாத்மாகாந்தி

13) மாட்டின்லூதரின் தலைமைத்துவத்தினால் ஏற்பட்ட நன்மையாது?

☞ கறுப்பின அமெரிக்கர்களின் சிவில் உரிமைகளை வெற்றேடுப்பதற்கான இயக்கத்தை வழிநடத்தி வெற்றி கண்டவர்.

14) செவ்விந்தியரின் உரிமைகளைப்பெற்றுக்கொடுக்கு தலைவரின்தலைமைத்துவ பொறுப்பினை ஏற்றுக்கொண்ட செயற்பட்டவர் யார்?

☞ சியாட்டல்

15) உலக வரலாறில் தலைமைத்துவ பண்புகொண்ட அறிஞர்கள்?

☞ ஜவஹர்லால் நேரு.

☞ வின்ஸ்டன்ட்ன் சேர்ச்சில்.

☞ நெல்சன் மண்டேலா.

☞ மகாத்மாகாந்தி.

☞ தடாபாய் நபரேஜி.

☞ கோபால் கிருஸ்ணகோகிலே.

☞ ரவிந்திரநாத்தாகூர்.

16) இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராககிளர்ந்தெழுந்த தலைமைத்துவாதிகள் ?

☞ அநாகரிக தர்மபால.

☞ பொன்னம்பலம் இராமநாதன்.

☞ காசிம் சித்திலெப்பை.

☞ டி.பி ஜாயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) **தலைமைத்துவத்தில் உள்ளவர்களின் கடமைகள்?**

- குறிக்கோள்களை வெற்றிகொள்ள வேண்டும்.
- சிறந்த வழி நடத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.
- பொறுப்பு வாய்ந்த விதத்தில் செயற்பட வேண்டும்.
- பொறுப்புவாய்ந்த வகையில் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
- சரியான முறையில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.
- தமக்கு கிழ் உள்ளோருக்கு உதவ வேண்டும்.
- தலைமைத்துவத்தினைப் பயன்படுத்தி தனிப்பட்ட நலன்களை நிறைவேற்றக் கூடாது. கடமைகளை நிறைவேற்வேண்டும்.

18) **தலைமைத்துவத்தினை ஏற்று பின்பற்றவோரில் இருக்கவேண்டிய பண்புகள்?**

- தலைமைத்துவத்திலுள்ள தலைவரை நம்புதல்.
- தலைவரின் கட்டளைகளை ஏற்றுச் செயற்படுதல்.
- தலைவருக்கு உதவுதல்.
- தலைவரைபாதுகாத்தல்.
- தலைவருக்கு மதிப்பளித்தல்.

19) **தலைவர்கள் எவ்வாறு சிறப்புப்பெறுகின்றனர்?**

- தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செய்பபடுவதன் மூலம் . .
- ஆளுமையுடைய தன்மையினால் எந்தொரு செயலையும் சிந்தித்து செய்தல்.
- சமூகத்தின் உரிய நோக்த்தினை நிறைவு செய்வதனால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) தலைமைத்துவம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

☞ பாடசாலை, வகுப்பறை, குடும்பம், ஆலயங்கள், பொது நிறுவனங்கள், இயற்கை அனர்த்தங்கள், விபத்து, இடப்பெயர்வு.

### பயிற்சிகள்

1) பாடசாலையில் நீர் பெற்றுக்கொண்ட தலைமைத்துவப் பண்புகளைக் குறிப்பிடுக?

2) உமக்கு இருக்கும் தலமைத்துவப் பண்புகள் யாவை?

3) உமது பாடசாலையில் தலைமைத்துவம் வகிக்கும் நபர்கள் யாவர்?

4) உமது குடும்பத்தில் காணப்படும் தலைவரின் பண்புகளைக் குறிப்பிடுக ?

5) தலைமைத்துவத்தினைப் பின்பற்றுவதனால் நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் இரண்டு தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

1) சமூக நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு தலைமைத்துவம் அவசியமானதாகும் ( )

2) சிறந்த தலைவர்கள் சமூகத்திற்கு அவசியமானவர்களாவர் ( )

3) குறித்த இலக்கினை நோக்கி பின்பற்றுவோரை வழிநடத்துவதே தலைமைத்துவம் ஆகும் ( )

4) பாடசாலையில் கற்றல் கற்பித்தல் , இணைப்பாடவிதான செயற்பாடுகளின் ஊடாக தலைமைத்தவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் ( )

5) விபத்துக்களின போதும் உடனடியாக தலைமைத்துவம் உருவாகின்றது ( )

6) தலைமைத்துவத்தினை பின்பற்றி நடப்பது சமூகப்பிரஜகளாகிய எமது ஒவ்வொருவரினதும் கடமைகளாகும் ( )

7) கூட்டுச் செயற்பாடுகளின் செயற்பாட்டினை அடைவதற்கு தலைமைத்துவம் அவசியமானதாகும் ( )

8) தலைமைத்துவத்தினைப் பெறுவதற்கு மன உறுதி , அர்ப்பண சிந்தை என்பன அவசியமானதாகும் ( )

9) கூட்டுச் சேர்ந்து வாழும் தேனீக்களிடம் தலைமைத்துவப் பண்புகள் காணப்படுகின்றன ( )

10) ஒரு சமூகத்தின் தலைவர் அம்மக்களின் சேவகர் ஆவார் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 5

## வேலையுலகத்திற்குத் தயாராகுவோம்

**1) வேலை என்றால் என்ன ?**

☞ சமூகத்தில் நற்பிரஜையாக வாழ்வதற்கு ஒரு நபர் பயனுள்ளதாகவும் இலாபகரமானதாகவும் ஒரு செயலைச்செய்வதற்கு மனிதசக்தியினையும் இயந்திர சக்தியினையும் பயன்படுத்தி செய்யப்படும் ஒரு முறையே வேலை எனப்படும்

**2) உலகில் காணப்படும் தொழில்களும் அதனை மேற்கொள்வோரும் ?**

☞ விவசாயம் - விவசாயிகள்

☞ கடற்றொழில் - மீனவர்கள்

☞ பாதுகாப்புசேவை - இராணுவ அதிகாரிகள்

☞ தேயிலை உற்பத்தி - தேயிலைக்கொழுந்து பறிப்பவர்கள்

☞ போக்குவரத்துச்சேவை - சாரதிகள்

☞ கல்வி - ஆசிரியர்கள்

☞ தொடர்புசாதனத்துறை - அறிவிப்பாளர்கள்

☞ தொழில்நுட்பத்துறை - கணினி இயக்குனர்கள்

☞ பல்வேறுபட்ட துறைகள் - எழுது வினைஞர்கள்

**3) வேலையுலகம் என்றால் என்ன?**

☞ சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட தொழில்களும், தொழில்துறைகளும் ஒன்று சேர்வதே வேலையுலகம் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) வைத்தியசாலையில் காணப்படும் தொழிலாளர்கள்?

- ☞ வைத்திய அதிகாரி
- ☞ தாதியர்
- ☞ தாதி உதவியாளர்கள்
- ☞ சாரதி
- ☞ சுத்திகரிப்புத் தொழிலாளி
- ☞ பாதுகாப்பு அதிகாரி

- ☞ தொழிலாளர்கள்
- ☞ எழுது வினைஞர்கள்
- ☞ கணக்காளர்கள்
- ☞ பராமரிப்பாளர்கள் ( வாட் பொறுப்பாளர்கள் )

5)பிரதேச அடிப்படையில் நிகழும் தொழில்கள் ?

- ☞ மலையகம் - தேயிலை, மரக்கறி
- ☞ மத்தியபிரதேசம் - பூக்கள்
- ☞ கடலோரப்பிரதேசம் - மீன்பிடி
- ☞ வெவல்தெனியபிரதேசம் - பிரம்புத்தொழில்

6) பாரம்பரியமகா மேற்கொள்ளப்படும் தொழில்கள் யாவை ?

- ☞ தங்க ஆபரண உற்பத்தி
- ☞ முகம் மூடி உற்பத்தி
- ☞ மட்பாண்ட உற்பத்தி
- ☞ பித்தளைப் பொருள் உற்பத்தி

7) வேலைவழங்கும் துறைகள் ?

- ☞ அரசும், அரசுசார்ந்த துறைகள்
- ☞ தனியார்துறை
- ☞ சுயதொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) ஊழியத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் வேலையுலகின் வகைகள்?

- ☞ உள உழைப்பு
- ☞ உடல் உழைப்பு

9) உள உழைப்பினை அதிகமாகப் பயன்படுத்தும் தொழில்கள் யாவை?

- ☞ கணக்காளர், வைத்தியர் , ஆசிரியர்

10) உடல் உழைப்பை அதிகமாக பயன்படுத்தும் தொழில்கள்?

- ☞ விவசாயிகள், தொழிலாளர்கள் , ஆடையுற்பத்தி

11) உடலும் உளமும் சேர்ந்த தொழில்கள்?

- ☞ பொறியியலாளர்

12) நமது நாட்டிற்கு பிரதானமான தொழில் எது?

- ☞ நெற்செய்கை ( விவசாயம்

13) நெற்செய்கைக்கு உதவும் உற்பத்தியாளர்கள் யாவர் ?

- ☞ பீடைநாசினி உற்பத்தியாளர்கள்.
- ☞ விவசாய உபகரண உற்பத்தியாளர்கள்.
- ☞ போக்குவரத்துச் சேவை வழங்குனர்.
- ☞ களஞ்சியப் படுத்துபவர்கள்.
- ☞ விற்பனையாளர்கள்.

14) நெற்பயிசெய்கைக்கு உதவுகின்ற நிறுவனங்கள் யாவை?

- ☞ நிர்ப்பாசனத் திணைக்களம்.
- ☞ விவசாயத்திணைக்களம்.
- ☞ விவசாய ஆராய்ச்சி நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) தொழில்களால் நாமும் சமூகமும்பெற்றுக்கொள்ளும் நன்மைகள் ?

- வாழ்க்கைக்கான நிரந்தர வருமானம் கிடைத்தல்.
- உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடிதல்.
- உட்கட்டமைப்பு சக்திகளான கல்வி, பாதுகாப்பு போன்ற அனைத்துத் தேவைகளையும் பெற்றுக்கொள்ள முடிதல்.
- சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம் , நீர் வசதி முதலியவற்றை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்துதல்
- பாதுகாப்பினைப் பலப்படுத்திக் கொள்ள முடிதல்.

16) எமக்குக் கிடைக்கும் தொழிலை நேர்மையாகவும் சிறப்பாகவும் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் ?

- நாட்டின் அபிவிருத்தி வளர்ச்சி அடையும்.
- செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து செய்வதனால் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படல்.
- சமூகத்தில் உயர்ந்த மதிப்புக் கிடைத்தல்.
- உழைப்பிலிருந்த பெற்றுக்கொள்ளும் ஊதியம் திருப்தியாக அமைதல்.
- பிறரிடமிருந்து கௌரவம் ஏற்படல்.
- காலத்திற்கு ஏற்ற வகையில் வாழப் பழகிக் கொள்ளல்.

17) உடல் உழைப்பு என்றால் என்ன?

- உடல்ரீதியாக மேற்கொள்ளும் தொழில்களை உடல்
- உழைப்பு என அழைப்பர்.

18) உள உழைப்பு என்றால் என்ன?

- உளரீதியாக மேற்கொள்ளும் உழைப்பினை உள
- உழைப்பு என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) பயன் மிக்க உழைப்பு என்றால் என்ன?

- ஒரு உற்பத்தி அல்லது சேவையினை சிறந்த முறையில் பெற்றுக்கொடுப்பதற்கு ஒரு நபர் வழங்கும் உழைப்பை பயன் மிக்க உழைப்பு என அழைப்பர்.

20) பயிற்றப்பட்ட உழைப்பாளி என்றால் என்ன?

- தொழிலாளர்கள் அறிவு, திறன் , மனப்பாங்கு எனபவற்றோடு ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டு நிபுணத்துவம் அடைதலே பயிற்றப்பட்ட உழைப்பாளி என அழைப்பர்.

21) தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதற்கான காரணங்கள்?

- உயர்ந்த திறன்களை பெற்றுக்கொள்ள செய்தல்
- தொழில் தேர்ச்சியினைப் பெற்றக்கொள்வதற்கு
- நபர்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக.
- உற்பத்தியினை அதிகரித்து நாட்டின் அபிவிருத்தியை வளர்ச்சியடையச் செய்ய.
- தொழிலாளர்களின் ஊழியத்தை அதிகரிப்பதற்கு.

22) இன்று உலகில் காணப்படும் தொழில்களுள் அதிகளவான பயிற்சி பெற வேண்டிய தொழில்கள்?

- விமானம் செலுத்தும் தொழில்.
- அறுவைச் சிகிச்சை.
- புதிய இயந்திர சாதனங்களை இயக்குதல்.
- கப்பல் செலுத்துதல்.

23) இன்று தொழில் பயிற்சியினைப் பெற்றுக்கொடுக்கின்ற அரச நிறுவனங்கள் ?

- தொழில் பயிற்சி அதிகார சபை.
- தேசிய பயிலுநர் பயிற்சி நிலையம்.
- இளைஞர சேவை மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) நாட்டின் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதில் மிக முக்கியமானது ?

☞ தொழில் ( வேலைவாய்ப்பு )

25) ஒரு நாட்டின் உயிர்நாடியாக விளங்குபவர் ?

☞ வேலை செய்யும் மக்கள் ( தொழிலாளர்கள்)

26) சிறந்த ஊழியர்களின் பண்புகளைக் குறிப்பிடுக?

☞ செய்யும் தொழிலில் நிபுணத்துவத்தினைப் பெற்றக்கொள்ளுதல்.

☞ செயற்றிறன் மிக்கவராகச் செய்படுதல்.

☞ அர்ப்பணிப்புடன் செயலாற்றதல்.

☞ தாம் செய்யும் தொழிலை சிறந்த நோக்கோடு மேற்கொள்ளல்.

☞ தொழில் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகுளுக்கு தீர்வு காண்பவராய் இருத்தல்.

## பயிற்சி

1) வேலை செய்வதனால் எமக்கும் நாட்டிற்கும் ஏற்படும் பயன்களைக் பட்டியல் படுத்துக?

2) உமது சமூகத்தில் காணப்படும் தொழில்களைக் குறிப்பிடுக?

3) தொழிலாளர்களுக்கு ஏன் பயிற்சி வழுங்கப்படுகின்றது இதற்கான காரணங்களை கலந்துரையாடுக?

4) வேலையினை அர்ப்பணிப்புடன் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) உமக்கு எதிர்காலத்தில் ஏதாவுது ஒரு வேலை கிடைத்தால் அதனை நீர் எவ்வாறு மேற்கொள்விர் எனக் குறிப்பிடுக?

6) தொழில் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்குகள் எவை?

7) பாடசாலைக் கல்வியினை முடித்தவுடன் தொழில் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனங்களைக் குறிப்பிடுக?

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

1) வேலை உலகம் பல்வேறு தன்மை வாய்ந்ததாகும் ( )

2) சிறந்த உழியர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவான் ( )

3) அனைத்துத் தொழில்களும் நாட்டின் அபிவிருத்திக்கு காரணமாகின்றது ( )

4) எமது வாழ்க்கைத்தரம் உயர்வடைய தொழில் அவசியமானதாகும் ( )

5) நாம் செய்கின்ற தொழில்களை சிறந்த நோக்கோடு செய்தல் வேண்டும் ( )

6) உடல்ரீதியாக மேற்கொள்ளப்படும் தொழில் உடல் உழைப்பு ஆகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) பொருளியலாளர்களின் கருத்து உழைப்பு என்பது உற்பத்திச் சாதனமாகும் ( )

8) உழைப்பாளிகளை பயிற்றுவிக்கும்போது அறிவு , திறன் மனப்பாங்கு விருத்தி அடைகின்றது ( )

9) கணனி தொழில்நுட்ப துறையினை வளர்ச்சியடையச் செய்கின்றது ( )

10) உளத்தொழில்களில் ஒன்று ஆசிரியத் தொழிலாகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 6

## எமது பிரதேசத்தின் பொதுச் சேவைகள்

**1) பொதுச்சேவை என்றால் என்ன?**

☞ சமூகத்தல் வாழ்கின்ற அனைவரினதும் வாழ்கை நிலையினை உயர்த்துவதனை நோக்காகக் கொண்டு அரசாங்கம், மாகாணநிர்வாக சபை , அரசசார்ப்பற்ற நிறுவனங்களினால் பொதுவாக வழங்கப்படுகின்ற சேவைகள் பொதுச் சேவைகள் என அழைக்கப்படுகின்றது.

**2.) சேவையின் பிரிவுகள் ?**

☞ இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் சேவைகள்.
☞ பணம் செலுத்தி பெறப்படும் சேைகள்.
☞ சலுகை அடிப்படையில் பெறப்படும் சேவைகள்.

**3) பொதுச் சேவைகள் ?**

☞ கல்விச் சேவை.
☞ போக்குவரத்துச் சேவை.
☞ சுகாதாரச் சேவை.
☞ தபாற்சேவை.
☞ மின்சாரம் வழங்கும் சேவை.
☞ நீர் வழங்கல் சேவை.

**3) ஆரம்பகாலத்திலிருந்து பொதுச்சேவைகள் வளர்ச்சி அடைந்த முறைகள்?**

☞ ஆரம்பகாலங்களில் ஆற்றோரங்களில் மக்கள் தமது வாழ்விடங்களை அமைத்துக்கொண்டனர் ஆனால் காலப்போக்கில் சனத்தொகை அதிகரித்ததன் காரணமாக பல்வேறு இடங்களை நோக்கி நகர வேண்டி ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் மக்கள் எதிர்கொண்ட நீர்பாசனம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு குளங்களையும் கால்வாய்களையும் அமைத்து பொதுச்சேவையாற்றினர்.

- இக்காலத்தில் மக்களுக்காக பெருந்தொகையான குளங்களை அமைத்து பொதுச்சேவை மேற்கொண்டமையால் மகாசேன மன்னன் மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்டான்.

- அநுராதபுரத்தில் புத்தசாச மன்னன் பத்து கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்து மக்களுக்கு பொதுச் சேவையினை வழங்கியிருந்தமை.
- மன்னர்கள் இக்காலங்களில் மூலிகைத்தோட்டங்களை அமைப்பதற்கு மன்னன் நடவடிக்கை எடுத்திருந்தமை
- ஆரம்பகாலத்தில் வைத்திய உபகரணங்கள் கண்டெடுக் கப்பட்டிருந்தமை.
- பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் போக்குவரத்து, வங்கிச்சேவை, காப்புறுதிச்சேவை, போன்ற பொதுச் சேவைகள் வளர்ச் சியடைந்தமை.
- தற்காலத்திலும் பிரித்தானியர் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பொதுச்சேவைகள் விருத்தியாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

**4) பொதுச்சேவைகளின் அடிப்படைப் பண்புகள்?**

- எல்லோரும் பொதுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றமை.
- எல்லாப் பிரஜைகளும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலாபம் ஈட்டுவதை விட பொதுமக்களுக்கு சேவை வழங்குவதினை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை.
- குறைந்த வருமானம் பெறுவோருக்கு விசேடமாக சகாயமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை.
- தனிமனித அபிவிருத்தியோடும் சமூக அபிவிருத்தியினைக் குறிக்கோளாகக் கொண்டவை.
- பொதுச்சேவைகளுக்கு சட்டத்தின் மூலம் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகக் காணப்படும்
- சமூகத்தினைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவை.
- அன்றாடத்தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவை.

5) பொதுச்சேவைகளின் அவசியங்கள்( நோக்கங்கள்) யாவை?
- மக்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்துதல்
- குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவுதல்
- பொதுச்சேவைகளிலிருந்து பெறப்படும் ரு சில சேவைகள் பிரஜைகளுக்கு தனித்தனியே பெற்றுக்கொள்வது கடினமானதாகக் காணப்படும்.

  உதாரணம் - மின்சாரம், போக்குவரத்து
- பிரதேசத்திற்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தல்
- நாட்டின் பொருளாதார உற்பத்தியினை பகிர்ந்தளிரப்பதடன் வியாபாரம் போன்ற நடவடிக்கைகளை இலகுவாக்கல்.
- சமூகத்தினைக் கட்டிக்காத்தல்.
- மனித உரிமையினைக் பாதுகாத்துக்கொள்ளுதல்.

6) நீர்பாசன திணைக்கள முறையினை உருவாக்கியவர் ?
- பிரித்தானியர் ( கி -பி 1900)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) **பொதுச்சேவையாக வழங்கப்படும் நீரின் பயன்பாடுகள் எவை?**

☞ விவசாய நடவடிக்கைகளுக்க பயன்படல்.

☞ சுத்தமான குடி நீராகப் பயன்படல்.

☞ கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படல்.

☞ குளியல் தடாகமாகப் பயன் படல்.

8) **பொதுச்சேவையினூடாக எச் சேவைகளுக்காக மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது?**

☞ வீடுகளுக்கு வெளிச்சம் வழங்குதல்.

☞ இயந்திர சாதனங்களின் இயக்கம்.

☞ கைத்தொழில் வியாபார நிலையங்கள்.

☞ வீதி வெளிச்சம் வழங்கல்.

☞ தொலைத்தொடர்பசேவைகள்.

9) **தென்னாசியனாசியநாடுகளில் சுகாதாரசேவை உயர்நிலையில் காணப்படும் நாடு ?**

☞ இலங்கை

10) **இலங்கையில் சுகாதார வசதி அதிகமாகக் கிடைப்பதனால் ஏற்படும் நன்மைகள்?**

☞ சிசுமரண வீதம் குறைந்து செல்லுதல்

☞ தாய் மரணவீதம் குறைவடைந்து செல்லுதல்

☞ போலியோ, யானைக்கால், மலேரியா, சயரோகம், அம்மைநோய்கள் குறைவடைந்து செல்லுதல்.

11) **சுகாதார சேவை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்?**

☞ தொற்றுநோய்களிலிருந்து பாதுகாத்தல்.

☞ தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

☞ போசாக்குத் திட்டத்தினை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வைத்திய பரிசோதனை மேற்கொள்ளல்.
- தாய்மார் நலன் பேணல்.
- நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- சுகாதாரக் கலிவியினை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தினை மேற்கொள்ளல் .
- பாடசாலை மாணவர்களுக்கு பற்சிகிச்சையினை மேற்கொள்ளல்.
- நோயாளிகளைப் பராமரித்தல்.
- தாய்சேய்காக குடும்ப சுகாதார வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்
- தீடீர் விபத்துக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளித்தல்.

**12) இலங்கையில் சுாதாரத்துறை வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் சில நோய்களைக் குணப்படுத்த முடியாமைக்கான காரணங்கள் யாவை?**

- மக்களுக்கு சுகாதாரம் பற்றிய விளக்கமின்மை.
- சுகாதார முறைப்படி உணவினை உட்கொள்ளாமை.
- சீரான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளாமை.

**13) கல்வியின் நோக்கங்கள் யாவை?**

- நாட்டினை அபிவிருத்திப்பாதையில் ஈட்டுச் செல்லல.
- அறிவுள்ள பிரஜைகளை உருவாக்குதல்.
- கௌரமான வேலைவாய்ப்பினைப் பெற்றக்கொள்ளல்.
- சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றுக்கொள்ளல்.
- வாழ்கையினை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) எமது நாட்டிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது?

☞ 9709 ( 2006 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி

15) இலங்கையில் போக்குவரத்துச் சேவைகளை நிறைவேற்றி வரும் நிறுவனங்கள்?

☞ இலங்கைப் போக்குவரத்துச் சபை.

☞ இலங்கை புகையிரத சேவை.

16). பாடசலை மாணவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் விடே பஸ்சேவையின் பெயர் யாது?

☞ சிசு சரிய

17) போக்குவரத்துச் சேவையினை செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?

☞ வீதிகளை ஒழுங்கமைத்தலும் புதுப்பித்தலும்.

☞ அதிவேக பாதைகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.

☞ புதிய பேருந்துகளைச் சேவைக்கு உட்படுத்தல்.

☞ புதிய தொடருந்துகளைச் சேவையில் இணைத்துக் கொள்ளல்.

☞ தனியார் போக்குவரத்தினை அதிகரிப்பதற்காக மானியங்களை வழங்குதல்.

☞ ஒருங்கிணைந்த நேர அட்வணையில் அடிப்படையில் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.

☞ பயணிகள் பாதுகாப்பை சட்டரீதியாக உறுதிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) **தகவல்களை பரிமாற்றிக்கொள்ளவதறற்கு பயன்படுத்தப்படும் சாதனங்களைக் குறிப்பிடுக?**

- ☞ கடிதம் அனுப்புதல் ( தபாலகஙடகளின் )
- ☞ மின்னஞ்சல் அனுப்புதல்
- ☞ தொலைத்தொடர்பு சாதனங்கள்
- ☞ இணையம்

19) **தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளப்படும் நவீன தொடர்பாடல் சாதனங்களைக் குறிப்பிடுக?**

- ☞ செய்மதித் தொடர்பாடல்.
- ☞ கையடக்கத் தொலைபேசி.
- ☞ தொலைக்காட்சி.
- ☞ பக்ஸ் இயந்திரம்.
- ☞ தொலைபேசி.

20) **தகவல் பரிமாற்றச் சேவையின் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ?**

- ☞ நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளலாம்.
- ☞ பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்பினை ஏற்படுத்தல்.
- ☞ வெளிநாடுளோடு தொடர்பினை விருத்தி செய்தல்.
- ☞ வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுதல்.
- ☞ சுற்றுலா நடவடிக்கைகளுக்குப் பயன்படல்.


21) **நீர் வழங்கல் சபையின் செயற்பாடு யாது?**

- ☞ பெரும்பாலான இடங்களுக்கு குடி நீர் வழங்கும்
- ☞ நடவடிக்கையினை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) **நீர் வழங்கல் சேவை மேற்கொள்ளப்படும் படி முறைகள்?**




- நீர் வழங்கல் சபைக்கு பொறுப்பாக பிரதேச பொறியிலாளர் காணப்படுவர்.
- வேலைப்பொறுப்பதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்ட வேலைகளை கண்காணித்து செயலாற்றுதல்.
- நீர் கொண்டு செல்வதற்காகன குழாய்களைப் பொருத்துபவரை குழாய் பொருத்துனர் என அழைப்பர்.
- தொழிலாளர்கள் நீரை பரிமாறும் நடவடிக்கையில் ஈடுபடுவர்.
- நீர் பாவிக்கப்பட்டதன் கூறுகளை வாசித்து அதற்கான கட்டணத்தை அறிவிப்பவர் நீர் மானி வாசிப்பாளர் ஆவார்.
- இவ்வாறு நீர் வழங்கல் சேவை படி முறையாகக் காணப்படும்.


23) **இலங்கை மின்சார சபையின் பொறுப்பு யாது ?**

இலங்கையின் பெரும்பாலான பிரதேசங்களுக்கு மின்சாரத்தினை வழங்குவதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) மின்சாரம் வழங்கும் பொறுப்போடு தொடர்பான அதிகாரிகள் .




24) மின்சாரத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள்?

- ☞ ஒளி ஒலி பெற்றுக்கொள்ளல்.
- ☞ மின்சார சாதனங்களை இயக்கிக் கொள்ள முடிதல்.
- ☞ நிர்வாக நடவடிக்கைகளை இலகு படுத்தல்.
- ☞ வேலைகளை இலகுவாக்கல்.
- ☞ பொழுது போக்கு சாதனங்களைப் பயன்படுத்தல்.
- ☞ கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படல்.

25) மக்கள் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள்?

- ☞ கொழும்பு தேசிய வைத்தியசாலை
- ☞ போதனாவைத்திய சாலைகள்
- ☞ ஆதார வைத்தியசாலைகள்
- ☞ மாவட்ட வைத்திய சாலைகள்
- ☞ சுகாதார சேவை அலுவலகங்கள்
- ☞ பரிசோதனை நிலையங்கள்
- ☞ தோட்ட சுகாதார மத்திய நிலையங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26) எமது பிரதேசத்தில் கல்விச் சேவையினை வழங்கும் பிரதான நிறுவனம் எது?

☞ பாடசாலை

27) பாடசாலையினை நடத்திச் செல்வதற்கு துணைபுரியும் அங்கத்தவர் ?

☞ அதிபர் ☞ பிரதி அதிபர் ☞ பகுதித்தலைவர்
☞ இணைப்பாளர்கள் ☞ வகுப்பாசிரியர் ☞ பாட ஆசிரியர்
☞ நூலக உதவியாளர் ☞ சிற்றூழியர்கள்
☞ காவற்காரர்

28) பாடசாலையினை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு உதவும் நிறுவனம் எது?

☞ வலயக் கல்வி அலுவலகம்

29) வலயக்கல்விப் பணிமனையில் பணி புரியும் அதிகாரிகள்?

☞ வலயக்கல்விப் பணிப்பாளர்
☞ மேலதிக வலயக்கல்விப்பணிப்பாளர்.
☞ கணக்காளர்
☞ பிரதிக்கல்விப்பணிப்பாளர் ( அபிவிருத்தி )
☞ பிரதிக்கல்விப்பணிப்பாளர் ( நிர்வாகம் )
☞ பிரதிக் கல் விப் பணிப் பாளர் ( திட்டமிடல் )
☞ பாடங்களுக்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர்
☞ கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
☞ நிர்வாக அதிகாரிகள்.

அனைவரும் அர்பணிப்புடன் செயற்படுவதனால் பாடசாலைகள் சிறந்த முறையில் இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) பொதுச்சேவைகள் யாவை?

- நீர
- மின்சாரம்
- சுகாதார சேவை
- கல்வி
- போக்குவரத்து
- தகவல் பரிமாற்ற சேவை

31) பொதுச்சேவைகளில் ஒன்றான நீரினை வழங்கும் நிறுவனங்கள்?

- நீர் சேகரிப்பு, நீர் விநியோக சபை
- மாநகரசபை
- பிரதேச சபை
- நகர சபை

32) நீர் விநியோக சபையின் கடமைகளையும் பொறுப்புக்களையும் குறிப்பிடுக?

- சுத்தமான குடி நீரை வழங்குதல்
- சீரான சேவையினை வழங்கல்.
- காலதாமதமின்றி சேவை வழங்குதல்.
- பாவனையாளர்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்குதல்.

33) மின்சாரத்தினை வழங்கும் பொதுச்சேவை நிறுவனம் எது?

- இலங்கை மின்சார சபை

34) இலங்கை மின்சார சபையின் பொறுப்புக்களும் கடமைகளையும் குறிப்பிடுக?

- சீராக மின்சாரத்தினை வழங்குதல்.
- தேவையான அளவு மின்சாரத்தினை வழங்குதல்.
- மின் கம்பங்களை முறையாகப் பாவித்தல்.
- பாதுகாப்புக்களுடன் மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ மக்களுடைய முறைப்பாடுகளுக்கு உடனடியாக தீர்வுகாணுதல்.

**35) சுகாதார சேவையினை வழங்கும் பொதுச்சேவை நிறுவனம் எது?**

☞ வைத்தியசாலை

**36) வைத்தியசாலையின் கடமைகளும் பொறுப்புக்களும் யாவை?**

☞ நோயாளிக்கு முறையாக சிகிச்சை அளித்தல்.
☞ தொற்று நோய்களைத் தடுத்தல்.
☞ நோயாளிகளைப் பாதுகாத்துக்கொள்ளல்.
☞ சேவையினை சீராக வழங்குதல்.

**37) பாடசாலையின் பொறுப்புக்களும் கடமைகளையும் குறிப்பிடுக?**

☞ முறையாக கல்வியினை வழங்குதல்
☞ சமூகத்திற்கேற்ற பிரஜைகளை உருவாக்குதல்
☞ நிபுணத்துவ அபிவிருத்தி மேற்கொள்ளல்
☞ நல்லதொரு சமூகத்தை உருவாக்கல்.
☞ சமூகத்தில் ஒன்றி வாழக் கூடிய பிரஜைகளை உருவாக்குதல்.

**38) போக்குவரத்தினை வழங்கும் பொதுச்சேவை நிறுவனங்கள் எவை?**

☞ இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரத சேவை, தனியார் பேருந்துச் சேவை.

39) போக்குவரத்து நிறுவனங்களின் பொறுப்புக்களும் கடமைகளும்?

☞ பயணிகளுக்கேற்ற பாதுகாப்பான சேவையினை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

☞ அர்ப்பணிப்புடனும் நீதியாகவும் சேவை செய்யக் கூடியவர்களைப் பயன்படுத்துதல்.

☞ காலத்திற்கேற்ப சேவைகளை வழங்குதல்.

**40) தகவல் பரிமாற்ற சேவையினை வழஙகும் பொதுச்சேவை நிறுவனங்கள் யாவை?**

☞ தபாற் திணைக்களம்.

☞ ஸ்ரீலங்கா ரெலிக்கொம்..

☞ இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்.

☞ இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்.

☞ பத்திரிக்கைகள்.

**41) தகவல் பரிமாற்றச் சேவையினை வழங்கும் நிறுவனங்களின் பொறுப்புக்களும் கடமைகளும் எவை?**

☞ செயற்றிறனான சேவைகளைகளை வழங்குதல்.

☞ உண்மையான தகவல்களை வழங்குதல்.

☞ அனர்த்தங்கள் பற்றி சரியான தகவல்களை வழங்குதல்.

☞ பக்கச்சார்பின்றி தகவல்களை வழங்குதல்.

**42) பேருந்து டிப்போவின் அமைப்பில் கடமையாற்றும் ஊழியர்கள் யாவர்?**

☞ டிப்போ முகாமையாளர்.

☞ உதவி முகாமையாளர். ( செயற்பாடு )

☞ உதவி முகாமையாளர் .( நிதி)

☞ உதவி முகாமையாளர் ( பொறியியல் )

☞ நிலைய பரிசோதகர்.

☞ எழுது வினைஞர்.

☞ தலைமைப்போமன்.

☞ சாரதிகள், நடத்துனர்கள்.

☞ தொழில்நுட்ப வினைஞர்களும் சிறுதொழிலாளர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43) பிரதான தபால்நிலையத்தில் சேவையாற்றும் சேவையாளர்கள் யாவர்?

- ☞ பிரதான அஞ்சல் அலுவலர்கள்
- ☞ தபால் நிலைய அதிபர் தரம் - 2
- ☞ அலுவலக உதவியாளர்
- ☞ தந்தி சேவகர்கள்

44) உப தபாலகத்தில் சேவையாற்றும் சேவையாளர்கள்?

- ☞ அஞ்சல் அலுவலர்கள்
- ☞ தாபாற்காரர்
- ☞ தந்திச் சேவகர்கள்

45) சுற்றாடல் பாதுகாப்பிற்காக இயங்கிவரும் அரச நிறுவனங்கள் யாவை?

- ☞ வனப்பாதுகாப்புத் திணைக்களம்
- ☞ வன விலங்குகள் திணைக்களம்
- ☞ கரையோரப்பாதுகாப்பத் திணைக்களம்
- ☞ மத்திய சுற்றாடல் அதிகார சபை

46) சமூகப்பாதுகாப்புத்திட்ட வேலைத்திட்டங்கள் யாவை?

- ☞ வறுமை நிவாரணவேலைத்திட்டம்
- ☞ சமூர்த்தி வேலைத்திட்டம்

47) வறுமை நிவாரண வேலைத்திட்டத்தின் நோக்கம் யாது?

- ☞ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவி செய்தல்.

48) சமூர்த்திவேலைத்திட்டம்முறைப்படுத்தப்பட்டமைக்கான காரணம் ?

- ☞ வாழ்கையினை நடாத்திச் செல்வதற்கு வறுமை
- ☞ மட்டங்களிலிருந்து மீள்வதற்கு செயற்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49) சமூர்த்தியினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் எது?
☞ கிராம எழுச்சித்திட்டம்

50) சமூர்த்தித் திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
☞ 2006 ஆண்டு

51) வீட்டுப் பிரச்சினையை தவித்துக்கொள்வதற்காக அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் எது?
☞ திரிய பியச

52) வருமானத்தினை அதிகமாக கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் எது?
☞ விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம்

53) கூட்டுறவுச் சங்கத்தினால் கிடைக்கப் பெறும் சேவைகள் எவை?
☞ குறைந்த விலையில் நுகர்வுப்பொருட்களை வழங்குதல்.
☞ கடனுதவி வழங்குதல்.
☞ போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.
☞ வங்கிச்சேவையினை வழங்குதல்.
☞ மரணச் சடங்குச் சேவைகளை வழங்குதல்..

54) 2006 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் கல்விக்காக செலவழித்த தொகையாது?
☞ 78.3 பில்லியன்

55) பாடசாலை மாணவர்களுக்குரித்தான பொறுப்புக்களும் கடமைகளும் ?
☞ பாடசாலைச் சட்டங்களைப் பின்பற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் அதிபரை மதித்தல்.
- குறித்த நேரத்தில் பாடசாலை செல்லல்.
- ஒழுக்கத்தை பேணல்.
- நல்ல நடத்தையைக் கொண்டிருத்தல்.
- பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- பாடசாலைக் கொடி, கீதம் என்பவற்றுக்கு மதிப்பளித்தல.
- கல்வி தொடர்பான எல்லாச் செயற்பாடுகளிலும் ஈடுபடல்.
- பாடசாலைப்புகளுக்கு இழுக்கு ஏற்படாமல் பாதுகாத்தல்.
- பாடசாலை சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்.

56) தொழிலைப் பெற்றுக்கொள்கின்ற பொதுத்துறை, அரசாங்கத் துறை, தனியார்துறைகளில் எம்மால் நிறைவேற்றப் படவேண்டியய கடமைகளையும் பொறுப்புக்களையும் கூறுக?

- உரிய நேரத்திற்கு வேலைக்குச் செல்லல்.
- கொடுக்கப்பட்ட வேலைகளை ஒழுங்காக செய்தல்.
- வேலை செய்யும் இடத்திற்கு எவ்விதபாதிப்பும் ஏற்படாத வகையில் வேலை செய்தல்.
- நிறுவனத்தின் நிர்வாகம், தொழில்தொடர்பாக எமக்களிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல்.
- நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாத்தல்.
- நிறுவனத்தின் ஊழியர்களின் நலன்களை கருத்திற்கொண்டு செயலாற்றுதல்.

57) எம்மால் சமூகத்திற்கு நிறைறவேற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்?

- நாட்டிலுள்ள சட்டங்களை மதித்தல்.
- நாம் வாழுகின்ற சூழலை பாதுகாத்தலும் பராமரித்தலும்.
- தனிநபருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொறுப்புக்களை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்களின் மனித உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் நடந்துகொள்ளல்.
- பொதுச்சொத்துக்களை பாதுகாத்தல்.
- நாட்டில் வாழும் எல்லா மக்களையும் இலங்கையர் என மதித்தல்

58) சுற்றாடலை பாதுகாக்க நாம் செய்ய வேண்டியவை?

- குப்பை கூளங்களை அகற்றுதல்
- சூழலில் இயற்கையம்சங்களை அழிக்காது இருத்தல்.
- சூழலை தூய்மைப்படுத்தி அலங்கரித்தல்.
- மிருகங்களை துன்புறுத்தாது இருத்தல்.
- சூழல் மாசடைய வழிவகுக்கும் சத்தங்களைத் தவிர்த்தல்.
- காடுகளை அழிக்காதிருத்தல்.
- நீரை வீண்விரையம் செய்யாதிருத்தல்.
- வளியை அசுத்தப்படுத்தாதிருத்தல்.

59) நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள்?

- பொறுமை.
- அன்பு , இரக்கம் காட்டல்.
- நீதியை மதித்தல்.
- நம்பகத்தன்மையினைக் கொண்டிருத்தல்.
- நடு நிலமையாகச் செயறற்படல்.
- வளங்களை வீணடிக்காமை.
- பொறுப்புக்களை நிறைவேற்றல்.
- விட்டுக்கொடுத்தல்.
- நேர்மையாக இருத்தல்.
- ஒழுங்கைப் பேணுதல்.
- நட்புடன் இருத்தல்.
- சூழலைப்பாதுகாத்தல்.
- ஒழுக்கம்.
- தலைமைத்துவத்தை மதித்தல்.
- சூழலைப்பாதுகாத்தல்.
- சுகாதாரப்பழக்கவழக்கங்களைப் பின்பற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்பாடுகள்.

1) ஊடகம் என்பதனால் கருதப்படுவது யாது?

2) தகவல்பரிமாற்றத்தினால் ஏற்படும் நன்மைகள்?

30) இணையத்தளத்தில் உலாவருவது பறறி நீங்கள் அறிந்து கொண்டவை எவை?

4) தொலைநகலினால் ஏற்படும் சாதகம் யாது ?

5) பொதுச் சொத்துக்களை எவ்வாறு பாதுகாக்கலாம்?

6) வீட்டில் மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்தும் முறைகளைக் குறிப்பிடுக?

7) கல்வியின் முக்கியத்துவம் யாவை?

08) போக்குவரத்துச் சேவையின் முக்கியத்துவம் தொடர்பாக கலந்துரையாடுக?

9) சமூகத்திற்கு எவ்வகையிலான பொதுச்சேவையினை வழங்குதல் வேண்டும் ?

10) பொதுச்சேவைகள் சமூகத்தினை உயர்த்தும் என்பது தொடர்பாக கட்டுரை எழுதுக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) மக்களுக்காக பொதுவாக வழங்கப்படும் சேவை பொதுச்சேவை என அழைக்கப்படும் ( )

2) மக்களுடைய வாழ்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு பொதுச்சேவை அவசியமானதாகும் ( )

3) தகவல்களை பல்வேறு வழிகள் மூலம் அறிந்து கொள்ளலாம் ( )

4) கல்வியானது பொதுச்சேவைகளில் ஒன்றாகும் ( )

5) இலங்கையில் பிரித்தானியரேநீர்பாசனத்திணைக்களத்திணை ஆரம்பித்து வைத்தார்கள் ( )

6) எழுத்து அல்லது படங்களை தொலைநகலில் பெற்றுக்கொள்ளலாம் ( )

7) கணினியின் ஊடாக இணையத்தின் ஊடாக உலாவருவதன் ஊடாக எமக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் ( )

8) சுற்றாடல் பாதுகாப்பிற்காக பல்வேறு நிறுவனங்கள் அரசினால் அமைக்கப்பட்டுள்ளன ( )

9) நவீன தொடர்பாடல் சாதனங்களில் பக்ஸ் இயந்திரமும் ஒன்றாகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) தென்னாசிய நாடுகளில் இலங்கையில் சுகாதாரசேவை உயர்ந்து காணப்படுகின்றது ( )

11) உலகில் 71 சதவீதம் நீர்பரப்பாகும் ( )

12) மகாபாராக்கிரமபாகுவினால் பராக்கிரமபாகு சமுத்திரம் அமைக்கப்பட்டதாகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 7
## சனநாயக மக்கள் சமூகம்

**1) சனநாயக ஆட்சி என்றால் என்ன?**

☞ ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடாத்தப்படும் மக்கள் ஆட்சி முறை இதுவாகும்.

**அ. நேரடி ஜனநாயத்தின் பிறப்பிடம்.?**

☞ கிரேக்கம்.

**ஆ. நேரடிஜனநாயகம் என்றால் என்ன?**

☞ கிரேக்க நாட்டின் பிரதேச ஆட்சியில் முற்காலத்தில் யாவரும் பொது இடத்தில் ஒன்று கூடி ஆட்சி பற்றிய தீர்மானத்தை எடுத்தார்கள் இது நேரடி ஜனநாயகம் என அழைக்கப்படும்.

**இ. பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்றால் என்ன,?**

மக்களுக்காக அவர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியூடாக ஆட்சி நடைபெறுவது பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஆகும்.

**2) சனநாயக வாழ்கை எனபது?**

☞ சமூகத்தில் வாழும் மனிதர் சகல வழிகளிலும் ஒருவரை ஒருவர் மதித்து பரஸ்பரம், ஒற்றுறுமையாகவும், சமாதானமாகவும், வாழ்வதே சனநாயக வாழ்கை ஆகும்.

**3) சமூகத்தில்அனைவரும் ஒன்றித்துவாழவேண்டுமானால் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் ?**

☞ சமத்துவத்தை பேணல்

☞ பரஸ்பரத்தினைப் பேணல்.

☞ ஒத்துழைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்களை உரிய முறையில் பின்பற்றல்.

4) சனநாயக வாழ்கை முறையின் பண்புகள்?
- ☞ பெரும்பான்மையோரின் விருப்பு மதிப்பளித்தல்.
- ☞ தலைமைத்துவத்தினை மதித்தலும் அவ்றுக்கு கீழ் படிதலும்.
- ☞ சட்டங்களை மதித்தலும் அதற்கு கீழ் படிதலும்.
- ☞ பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணுதல்.
- ☞ பரஸ்பர ஒத்துழைப்புடன் கருமமாற்றுறுதல்.
- ☞ சமூகச் சூழலையும் பௌதீகச் சூழலையும் பாதுகாத்தல்.
- ☞ பிறரது சுதந்திரங்களை பாதிக்காத வகையில் நடந்து கொள்ளல்.
- ☞ நல்லொழுக்கங்களைப் பின்பற்றி வாழுதல்.
- ☞ கருத்துக்களை வெளியிடல்.
- ☞ பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல்.

5) சனநாயக வாழ்கை முறையின் பிரதான பண்புகள்?
- ☞ சுய கட்டுப்பாடு
- ☞ சட்டத்திற்கு கீழ் படிந்து நடத்தல்
- ☞ பேச்சு வார்த்தையும் இணக்கப்பாட்டினையும் மேற்கொள்ளல்.

6) சுய கட்டுப்பாடு என்பது ?
- ☞ ஒருவர் தம்மைத்தானே தாம் வாழுகின்ற சமூகத்திற்கு பொருத்தமாக மாற்றி வாழப்பழகுதலே இதுவாகும்

7) சுயகட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகள்?
- ☞ பிறருடன் இணைந்து வாழப்பழகிக் கொள்ள முடிதலல்
- ☞ சமூகத்தில் கௌரமகா வாழ முடிதல்.
- ☞ நல்லொழுக்கம் உள்ளவராக இருக்க முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ செயற்பாடுகள் ஆக்க பூர்வமானதாக இருத்தல்.

☞ சிறந்த மனப்பாங்கு வளர்ச்சி அடைதல்.

**8) சட்டம் என்பது ?**

☞ ஒரு நாட்டினுள் மனிதர்களின் வெளி நடத்தையினைக் கட்டுப்படுத்துவதற்காக ஆட்சி அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டின் அரசினால் நடை முறைப்படுத்தப்படும் கட்டளைளே சட்டமாகும்.

**9) சமூகத்தை முறையாகப் பாது காப்பது?**

☞ சட்டங்கள்.

**10) சட்டங்கள் தொடர்பான அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ளும் இடம் ?**

☞ குடும்பம்

11) குடும்பச்சட்டங்கள் என்பது?

☞ நீண்டகாலமாக பின்பற்றப்படும் குடும்ப வழக்கவழக்கங்கள் குடும்பச் சட்டங்கள் என அழைக்கப்படும்.

12) குடும்பச்சட்டத்தினுள் அடங்கும் விடயங்கள்?

☞ பெற்றோரின் அனுமதி இன்றி வீட்டு வெளியே செல்லாது இருத்தல்.

☞ பெற்றோரின் அழைப்புக்கு செவி மடுத்தல்

☞ பெற்றோரின் தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொள்ளல்

☞ குடும்ப மரபுகளைப் பேணல்

13) சட்டத்தின் பண்புகள் ?

☞ இறை அதகாரத்தினை பிரதானமாகக் கொண்டு அரசு மூலம் செயற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சட்டத்தை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்
- சட்டம் எல்லோருக்கும் பொதுவானதாக இருத்தல்
- சட்டங்களுக்கு முறையான நீதிமன்றங்களே விளக்க மளிக்கின்றமை.
- மனிதனது நடத்தைகளையும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல்
- சமூக அபிலாசைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மாறக் கூடியதாகக் காணப்படல்.

**14) சட்டத்திற்கு கீழ் படிந்து நடப்பதனால் ஏற்படும் நன்மைகள்?**

- சட்டங்கள் நல்லொழுக்கத்தை ஏற்படுத்தும்.
- பிரஜைகளின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல்.
- சட்டங்களைப் பின்பற்றுவதனால் கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- தனிப்பட்டோரின் பாதுகாப்பினை உறுதிபடுத்தும்.

15) பாடசாலையில் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்கள்?

- உரியநேரத்திற்கு பாடசாலைக்கு வருதல்.
- பாடசாலை நேரத்தில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடல்.
- சீருடையை அணிந்து வருதல்.
- நேர சூசிக்கேற்ப பாடங்களை பயிலுதல.
- இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடல்.

16) குடும்பத்தில் காணப்படும் சனநாயகப்பண்புகள்?

- அரவணைப்பு.
- அன்பு
- சுதந்திரம்
- விட்டுக்கொடுப்பு
- உதவி புரிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ உணர்ச்சி வசப்படாமை.
- ☞ பாதுகாப்பு
- ☞ பணிவுடமை.
- ☞ ஒத்துழைத்தல்
- ☞ முடிவெடுத்தல்
- ☞ சமத்துவத்தைப் பேணல்

**17) பாடசாலையில் காணப்படும் சனநாயகப் பண்புகள்?**

- ☞ பாடசாலையின் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல்
- ☞ மாணவர்கள், ஆசிரியர்கள் சிறந்த தொடர்பைப் பேணுதல்.
- ☞ சகிப்புத்தன்னையுடன் இருத்தல்.
- ☞ பெரும்பான்மையோரிக் கருத்துக்கு மதிப்பளித்தல்.
- ☞ பரஸ்பரம் மாணவர்களுக்கிடையே உதவிகளைச் செய்தல்.
- ☞ பாடங்களை விளங்குவதற்கு ஆசிரியர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- ☞ கலந்துரையாடல் மூலம் தீர்வினைப் பெற்றுக்கொள்ளல்
- ☞ அமைதியான வழியில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளல்
- ☞ அதிபர், ஆசிரியர் தலைமைத்துவத்தினை மதித்தல்.
- ☞ வெற்றி தோல்விகளைச் சகித்துக் கொள்ளல்.

**18) ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் பெறும் நாடுகள் எத்தனை?**

- ☞ 192

**19) ஐக்கிநாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு எது?**

- ☞ 1945 இல்

**20) ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படும் காலம்?**

- ☞ ஒக்டோபர் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) **ஐக்கியநாடுகள் சபையின் நோக்கங்கள்?**

- சர்வதேச பாதுகாப்பினை முன்னேடுத்தல்
- நாடுகளுக்கிடையே நட்புறவினை வளர்த்தல்
- சர்வதேச பொருளாதார, சமூக கலாசார, மற்றும் மானிடப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- மனித உரிமைகளைப் பேணல்.

22) **யுனிசெப் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?**

- 1946

23) **யுனிசெப் நிறுவனத்தின் தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள இடம் எது?**

- நீயூயோர்க்

24) **யுனிசெப் நிறுவனத்தின் நோக்கங்கள்?**

- சிறுவர் உரிமையினை பாதுகாத்தல்.
- சிறுவர்களில் முழு வளர்ச்சியினை ஏறற்படுத்தல்.
- சுகாதார சேவைகள் மற்றும் போசணை உணவு
- வழங்குவதற்காக உதவுதல்.

25) **யுனி செப் நிறுவனம் இலங்கையில் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள்?**

- குழந்தை சகாதாரத்தினை மேம்படுத்த உதவுதல்
- குழந்தைகளின் இறப்பு வீத்ததைக் குறைப்பதற்காகன நடவடிக்கையினை எடுத்தல் .
- சுகாதார பாது காப்பினை ஏற்படுத்தல்.
- அடிப்படை கல்வி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- சிறுவர் துஸ்பிரயோகத்தைக் குறைறப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26) **சிறுவர் சமுதாயம் என்பது?**

☞ 18 வயதிற்கு உட்பட்டவர்களை சிறுவர் சமுதாயம் என அழைப்பர்

27) **ஐக்கியநாடுகள் சபையில் சிறுவர் உரிமை பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு எது?**

☞ 1989 இல்

28) **சிறுவர் பாதுகாபினை வழங்கும் நிறுவனங்கள் ?**

☞ சிறுவர் பாதுகாப்பு நிதியம்

☞ சிறுவர் அதிகார சபை

29.) **சிறுவர்களின் உரிமைகள்?**

☞ பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

☞ உயிர் வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை.

☞ நலன்களையும் பெற்றோரின் பாதுகாப்பினையும் பெறும் உரிமை.

☞ சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியீடும் உரிமை.

☞ கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.

☞ சித்திரவதை இழிவான நடத்தைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.

☞ பெற்றோர்களுடன் வாழ்வதற்கும் அவர்களுடன் உறவுகளைப் பெறுவதற்கான உரிமைகள்

☞ சமய, கலாசார வழிமுறைகளை அனுபவிக்கும் உரிமை.

☞ வாழ்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கான உரிமை.

☞ விளையாட்டு பொழுது போக்கு நடவடிக்கையில் பங்குபற்றும் உரிமை.

☞ சுகாதாரத்தையும், சுகாதார பராமரிப்பையும் பெறுவதற்கான உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ பாலியல் துஸ்பிரயோகம் போதைப்பொருள் துஸ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- ☞ ஆரம்பக்கல்வியினை கட்டாயமாகவும் இலவசமாகவும் பெறல்
- ☞ விரும்பிய கல்வியைப் பெறல்
- ☞ சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல்
- ☞ விரும்பிய மொழியைப் பேசுதல்
- ☞ விரும்பிய இடத்தில் வாழும் உரிமை.
- ☞ விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை.

**30) சிறுவர்களின் கடமைகள்?**

- ☞ பெற்றோருக்கு கட்டுப்படுத்தப்பட்டு நடத்தல்.
- ☞ சமூகத்தில் மூத்தோர்களை மதித்தல்.
- ☞ பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- ☞ நல்லொழுக்கங்களை கடைப்பிடித்து வாழுதல்.
- ☞ தலைமைத்துவத்திற்கு கீழ் படிதல்.
- ☞ சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மதித்தல்.
- ☞ குடும்பத்தவர்களையும் அயலவர்களையும். நேசித்தல்
- ☞ பிராணிகள், உயிரினங்கள் மீது அன்பு காட்டுதல்
- ☞ ஆசிரியர்களுக்கு மரியாதை செய்தல்.
- ☞ வலது குறைந்தோருக்கு உதவுதல்.
- ☞ நண்பர்களுடன் ஒற்றுமையாகப் பழகுதல்..
- ☞ சமூக முன்னேற்றத்தில் பங்கேடுத்தல்.
- ☞ சுற்றாடலைப் பாதுகாத்தல்.
- ☞ ஆரோக்கியமாக வாழ்தல்.

**31) சமூகம் நிலைத்திருப்பதற்கு சனநாயக்கருத்துக்களின் அவசியங்கள்?**

- ☞ நபர்களிடையே உறவுகளைக் கட்டியெழுப்புதல்.
- ☞ குடும்ப உறவினர்களிடையே சிந்த தொடர்புகளை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பாதுகாப்பு பெற..
☞ உரிமைபெற..
☞ கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவரச் செய்ய.
☞ பிறருடன் நல்லுறவை விருத்தி செய்ய.
☞ அயலவர்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்தல்.
☞ முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ள..

என்பன தொடர்பான சனநாயகக் கருத்துக்களைப் பெற்று சமூகம் நிலை பெறுவதற்கு அவசியம்.

☞ பரஸ்பர சகிப்புத் தன்மையுடன் வாழுதல்.
☞ குழுக்களிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்தல்.
☞ சகிப்பு தன்மையினை ஏற்படுத்தல்.
☞ கருத்துக்களை மறைவின்றி வெளிப்படுத்தல்.
☞ சமூகப்பாதுகாப்பை உறுதி செய்தல்.
☞ தலைமைத்துவத்திற்கு கீழ் படிந்து நடத்தல்

போன்ற கருத்துக்கள் சமூகம் நிலைத்திருப்பதற்கு அவசியமாகும்.

31) சனநாயக நாட்டில் வாழும் தனிநபர்களுக்கான குடியியியல் **உரிமைகள்?**

☞ விரும்பிய இடத்தில் வாழும் உரிமை.
☞ தனியாள் உரிமை.
☞ கருத்துக்களை வெளியீடும் உரிமை.
☞ சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை.
☞ சமத்துவம் பற்றிய உரிமை.
☞ விரும்பிய சமயத்தைப் பேணும் உரிமை.
☞ சட்டத்தின் முன் சமமாக மதிக்கும் உரிமை.
☞ கூட்டம் கூடும் உரிமை.
☞ வேலை செய்யும் உரிமை.
☞ குடும்ப வாழ்கையினை நடத்தும் உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ உயர் கல்வி பெறும் உரிமை.
☞ தமது கலாசாரத்தைப் பின்பற்றும் உரிமை.
☞ விரும்பிய சமயத்தை தப்பின்பற்றம் உரிமை.
☞ விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்யும் உரிமை.

**32) சனநாயக நாட்டில் வாழும் நபர்களுக்கான அரசியல் உரிமைகள்?**

☞ ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் உரிமை.
☞ அரசியல் கட்சியில் சேரும் உரிமை.
☞ தேர்தலில் அபேட்சகராகும் உரிமை.
☞ பிரசாரம் செய்யும் உரிமை.
☞ தேவைகளை அரசாங்கத்திடம் முன்வைக்கும் உரிமை.
☞ அரசியல் பதவி வகிக்கும் உரிமை.
☞ அரசினை விமர்சிக்கும் உரிமை.

## செயற்பாடுகள்

1) சனநாயகம் என்றால் என்ன?

2) சனநாயகத்தின் இலட்சணங்கள் எவை?

3) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் அமைப்புக்களில் பெயர்களைக் குறிப்பிடுக?

4) சிறுர்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) சனநாயக நாட்டில் பிரஜைகளின் உரிமைகள் மீறப்படும் சந்தர்பங்களைக் குறிப்பிடுக?

6) உங்களது குடும்பத்தில் நீர் அவதானித்த சனநாயகப்புண்புகளைக் குறிப்பிடுக?

7) சுய கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கான வழிகள் எவை?

8) நியாயத்திற்கும் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

9.) சட்டத்திற்கு கீழ் படிந்து நடப்பதனால் ஏற்படும் நன்மைகள்?

10) சனநாயகம் தொடர்பாக ஆபிரகாம்லிங்கன் கூறிய கருத்து யாது?

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள்**

1. மக்களால் மக்களுக்கான ஆட்சி ஜனநாயக ஆட்சியாகும் ( )

2) சனநாயகம் தோற்றம் பெற்ற நாடு கிரேக்கம் ஆகும் ( )

3) சட்டத்திற்கு கீழ் படிதல் ஜனநாயக வாழ்கைமுறையின் பண்பாகும் ( )

4. சுய ஒழுக்கத்துடன் வாழுதல் சுய கட்டுப்பாடு ஆகும் ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வீதிச் சட்ட திட்டங்களை கடைப்பிடித்து நடத்தல் எமது கடமையாகும் ( )

6) ஜனநாயக சமூகத்தில் கலந்துரையாடலின் மூலம் தீர்வு காணப்படுகின்றது ( )

7) குடும்பத்தில் இருந்தே சட்டங்கள் ஆரம்பித்தன ( )

8) சகிப்புத்தன்மையுடன் வாழப் பழகிக்கொள்ளவேண்டும் ( )

9) சமூகம்உறுதியாகநிலைத்திருப்பதற்குஜனநாயகப்பண்புகள் அவசியமானதாகும் ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 8

## பல்கலாசார சமூகமொன்றில் நற்பிரஜையாக வாழ்தல்

1) பல் கலாசார சமூகம் என்றால் என்ன?

☞ பல இன மக்கள் சேர்ந்த வாழும் சமூகத்தினை பல் கலாசார சமூகம் என அழைப்பர். இவ்வாறான சமூகத்தில் பலமொழிகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், கலை கலாசாரம் வேறுபட்டனவாக காணப்படும்.

2) கலாசாரம் என்றால் என்ன?

☞ மனிதனால் ஏற்படுத்திக்கொண்ட பழக்கவழக்கங்கள், மொழி, சமயம், ஆற்றல்கள், அறிவுவகைகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் அடங்கிய ஒரு கூட்டான செயற்பாடே கலாசாரம் என அழைக்கப்படும்.

3) கலாசாரத்திற்குள் உள்ளடங்கும் விடயங்கள்?

☞ சமயம் , மொழி, குடும்பப்பின்னணி, பொருளாதாரப் பின்னணி. நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், மனப்பாங்கு, அரசியல் , கல்வி, தொழில்நுட்பம், என்பன அடங்கும்,(அவை நாட்டிற்கு நாடு வேறுபட்டதாக அமையும்.

4) கலாசாரம் தொடர்பாக தத்துவஞானிகள் தெரிவித்த கருத்துக்கள்?

☞ இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் கலைக்கும் அடிப்படையான ஒன்றாக கலாசாரம் கருதப்படுகின்றது

( **பேட்ன்ஸ் ரசல்** )

☞ கலாசாரம் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட படைப்பொன்றல்ல ( **க்லோட் லெச் ஸ்ரவுஸ்.** )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) கலாசாரத்திற்குள் முக்கியத்துவம் பெறும் அம்சங்கள்?

- ☞ கலைகள்
- ☞ எதிர்பார்ப்புக்கள்
- ☞ பழக்கவழக்கங்கள்
- ☞ சட்டங்கள்
- ☞ எண்ணங்கள்
- ☞ தொழில்நுட்ப வளர்ச்சிகள்
- ☞ மொழி
- ☞ சமயம்
- ☞ ஆடைகள்
- ☞ நம்பிக்கைகள்
- ☞ உற்பத்தி முறை
- ☞ இலக்கியம்
- ☞ ஆற்றல்கள்
- ☞ சமூகப்பெறுமானங்கள்
- ☞ ஆபரணங்கள்.

6) பல்கலாசாரம் காணப்படும் நாடுகளில் காணப்படும் ஒருமைப்பாடுகள் ?

- ☞ வாழும் நாடு
- ☞ நிர்வாகக் கட்டமைப்பு
- ☞ சேவை வழங்கலும் சேவை பெற்றுக்கொள்ளலும்
- ☞ தேசியகீதம், தேசியக் கொடி
- ☞ தேசிய உரிமைகள்

7) பல்கலாசாரம் காணப்படும் நாடுகளில் காணப்படும் வேறுபாடுகள் ?

- ☞ மொழி
- ☞ சமயம்
- ☞ பழக்கவழக்கங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சடங்கு சம்பிரதாயங்கள்
- ஆடையணிகள்.
- இலக்கியம், கலைகள்

**8) இலங்கையில் காணப்படும் கலாசாரம் ?**

- பல் கலாசாரம்

**9) இலங்கையில் பல்கலாசாரம் காணப்படுவதற்கான காரணங்கள்?**

- இலங்கை 2500 வருடகால நீடித்த வரலாற்றை கொண்டதால்.
- நாட்டின் அமைவிடம்

**10) இலங்கையின் பல்கலாசாரத்தின் தன்மைகள்?**

- பல இனங்கள் காணப்படுகின்றமை.
- பல சமயங்கள் காணப்படுகின்றமை.
- வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றமை.
- பல வாழ்வாதார நடவடிக்கைகள் காணப்படுகின்றமை.
- பல சமூகப்பிரிவினர் காணப்படுகின்றமை.

**11) இலங்கையில் காணப்படும் இனரீதியான கல்வகைத் தன்மை.**

- சிங்களவர் - 74 வீதம்
- இலங்கைத்தமிழர் - 12.6 வீதம்
- இந்தியத்தமிழர் - 5.5 வீதம்
- முஸ்லிம்கள் - 7.1
- ஏனையவர் - 0.8 வீதம்.

**12) இலங்கையில் காணப்படும் சமயங்கள்?**

- இந்து சமயம்
- இஸ்லாம்
- கிறிஸ்தவம்
- பௌத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) **இலங்கையின் அரச மதம் ?**

☞ பௌத்தமதம்

14) **இலங்கையில் அரச மொழியாகக் கருதப்படும் மொழிகள்?**

☞ சிங்களம் , தமிழ்

15) **இலங்கையில் காணப்படும் இனரீதியான பல்வகைத் தன்மை.**

☞ பௌத்தம் - 73.7

☞ இந்து சமயம் - 10.9

☞ இஸ்லாம் - 6.2

☞ கிறிஸ்தவம் - 7.6

☞ ஏனையவை - 1.6

16) **இலங்கையில் காணப்படும் வாழ்வாதாரத்தின் பல்வகைமைகள்?**

☞ விவசாயம்

☞ மீன்பிடி

☞ வர்த்தகசேவைகள்

☞ சிறு தொழில்கள்

☞ ஏனைய தொழில்கள்

17) **இலங்கையில் காணப்படும் பிரதேசரீதியான பல்வகைத் தன்மை.**

☞ கரையோரச்சிங்களவர்

☞ யாழ்பாணத்தவர்

☞ மட்டக்களப்பார்

☞ மலையகத் தழிழர்

18) பல்கலாசாரம் கொண்ட எமது நாட்டில் சடங்குகள் சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படும் சந்தர்ப்பங்கள்?

☞ தாய் கருவுற்று இருக்கும் காலத்தில்

☞ குழந்தையின் பிறப்பின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதன் முதல் குழந்தைக்கு உணவூட்டும் போது.
- கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் போது
- பருவமடைதல்
- திருமண வைபவம்
- புது வீடு கட்ட ஆரம்பிக்கும் போது.
- மரணச் சடங்கின் போது

**19) இலங்கையில் காணப்படும் கலாசாரங்கள்?**

- பௌத்த கலாசாரம்
- இந்து கலாசாரம்
- இஸ்லாமிய கலாசாரம்
- கிறிஸ்தவ கலாசாரம்

**20) பௌத்தர்கள் கொண்டாடும் விழாக்கள்?**

- வெசாக்
- பொசன்
- எசல

**21) வெசாக்தினத்தைக் கொண்டாடுவதற்கான காரணங்கள்?**

- புத்தபெருமானின் பிறப்பு
- ஞானோதயம்

என்பவற்றை மையமாக வைத்து வெசாக் கொண்டாடப்படுகின்றது.

**22) வெசாக் தினத்தில் புத்த பெருமானை வழிபடும் முறை?**

- அன்னதானம், தியானம், ஆகிய கருமங்களில் ஈடுபடுவர்
- மலர்கொண்டு பூசை செய்தல்
- வீடு , விகாரை, பாடசாலை ஆகியவற்றை அலங்கரித்து கொண்டாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23) பொசன் விழாக் கொண்டாடக் காரணம்யாது?

☞ இலங்கைக்கு மஹிந்ததேரர் புத்த சமயத்தைக் கொண்டு வந்ததை நினைவு கூரும் முகமாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

24) மஹிந்ததேரரின் உருவச் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் நிகழ்வு யாது?

☞ பொசன் நிகழ்வு

25) பொசன் விழா விசேடமாகக் கொண்டாடப்படும் இடங்கள்?

☞ அநுராதபுரம்

☞ மிஹிந்தலை.

26) எசல விழா கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்?

☞ காலம் காலமாக புத்தரின் புனித தந்த தாது விற்கு பணியாற்றும் முகமாக கொண்டாடப்படுகின்றது.

27) பௌத்த சமயத்தவர் பின்பற்றும் சடங்குகளும் சம்பிரதாயங்கள்?

☞ குழந்தை பிறந்த பின் விகாரைக்குச் சென்று வழிபடுதல்.

☞ திருமணச் சடங்கின் போது மணமக்களை ஜயமங்கல கீதம் இசைத்து ஆசிர்வதித்தல்

☞ மரணச்சடங்கின்போது பிக்குமார்களை அழைத்து வாழ்கையின் நிலையில்லாத தன்மை தொடர்பாக உபதேசம் கேட்டு சடங்கைச் செய்தல்.

28) இந்து சமயத்தவர் கொண்டாடும் விழாக்கள்?

☞ தைப்பொங்கல்

☞ தீபாவளி

☞ மஹாசிவராத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) இந்து சமயத்தவர் சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடும் பண்டிகை?

☞ தைப்பொங்கல்

30) பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்?

☞ உழவுத்தொழிலுக்கு உதவிய மாடுகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக இவ் விழா கொண்டாடப்படுகின்றது.

31) பட்டிப்பொங்கல் கொண்டாடப்படும் முறை?

☞ மாடுகளை குளிப்பாட்டி அலங்கரித்து பட்டியில் பொங்கல் படைத்து வழிபட்டுக் கொண்டாடுவர்.

32) இந்துக்கள் தீபாவளியினைக் கொண்டாடுவதற்கான காரணம்யாது?

☞ நரகாசுரன் என்ற கொடும் அசுரனை கிருஷ்ண பகவான் அழித்த தினத்தைக் கொண்டாடுவதே தீபாவளியாகும்

33) இவ் விழா தீபாவளி என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

☞ தீபங்களை வரிசையாக ஏற்றி கொண்டாடுவதனால் தீபாவளி என அழைப்பர்

34) தீபாவளித்திருநாளை கொண்டாடும் முறை?

☞ அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று விசேட பூசை செய்து விசேட உணவுப்பண்டங்கள் தயாரித்து உண்டு மகிழ்ந்து கொண்டாடுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35) மகா சிவராத்திரி என்பது?**

☞ சிவபெருமானிடமிருந்து அரனைப் பெற்றுக்கொள்ளும் முகமாக விரதம் அனுஸ்டித்து இரவு முழுவதும் விழித்திருந்து வழிபாடுகளில் ஈடுபடுவது சிவராத்திரி ஆகும்

**36) இந்துக்க்ள் மேற்மேற்காள்ளும் சடங்குகளும் சம்பிரதாயங்கள்?**

☞ குழந்தை பிறந்ததும் 31 நாட்களின் பின் குழந்தைக்கு நாமம் சூட்டும் நிளழ்வு இடம் பெறல்

☞ குழந்தை பிறந்து 41 ஆம் நாளன்று குழந்தையும் தாயையும் கோயிலுக்கு கூட்டிச் செல்லுதல்

☞ ஏடு தொடக்குதல்

☞ திருமணம்

**37) திருமணத்தின் போது பின்பற்றப்படும் சடங்குகள்?**

☞ பொன்னுரக்கல்

☞ தாலி கட்டுதல்

☞ கெட்டிமேளம் கொட்டுதல்

☞ கன்னிகாதானம்

☞ மாலை மாற்றதல்

☞ அம்மி மிதித்தல்

☞ கணையாழி எடுத்தல்

☞ அருந்ததி காட்டல்

**38) திருமணக்கிரியையின் போது கெட்டி மேளம் கொட்டப் படுவதற்கான காரணங்கள்?**

☞ தாலி கட்டும் போது ஏதாவது ஒரு மூலையில் யாரோ யாரையோ அமங்கலமாய் திட்டிக்கொண்டு இருந்தால் அத்தகைய வார்த்தைகள் மணமக்களின் காதுகளில் விழக் கூடாது என்பதற்காக கெட்டி மேளம் கொட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39) **திருமணத்தின் போது அம்மி மிதிக்கப்படுவதற்கான காரணம் யாது?**

☞ பெண்ணானவள் கல்லைப்போன்று உறுதியுடன் மனம் தளராது தன்னுடைய கற்பு நிலையினின்றும் பிரியாமலும் கணவனின் பற்று நீங்காலும் இருக்க வேண்டும் என்பதற்காக அம்மி மிதிக்கப்படுகின்றது.

41) **இந்துக்கள் மரணச் செய்தியினை எவ்வாறு அறிவிப்பார்?**

☞ பறையடித்தல் மூலம்

42) **இஸ்ஸாமியர் கொண்டாடும் பண்டிகைகள் எவை?**

☞ நோன்புப் பெரு நாள்

☞ ஹஜ்ஜீப் பெரு நாள்

43) **நோன்புப் பெருநாளை அரபியில் எவ்வாறு அழைப்பர்?**

☞ ஈதுல் பித்தர்

44) **நோன்பு நோற்கப்படும் காலம்?**

☞ இஸ்ஸாமிய ஹிஜ்ரி ஆண்டுக்கணக்கின் படி எட்டாவது மாதமான ரமழான் மாதம் முழுவதும் முஸ்ஸிம்களின் நோன்பு நோற்கும் காலமாகும்

45) **நோன்புப் பெரு நாள் நோக்கற் படுவதற்கான காரணங்கள்?**

☞ நோன்பு நோற்பதன் மூலம் பிறரின் பசித்துன்பத்தினை அறிந்து பிறருக்கு உதவுபவர்களாக முஸ்ஸிம்கள் மாற வேண்டும் என்பதற்காக நோன்புப் பெரு நாள் கொண்டாடப்படுகின்றது.

46) **ஹஜ்ஜீப் பெருநாள் கொண்டாடப்படும் காலம் யாது?**

☞ இஸ்ஸாமிய ஹீஜ்ரி ஆண்டின் 12 மாதமான துல்ஹஜ்மாதம் 10 நாள் கொண்டாடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47) ஹஜ்ஜீப் பெருநாள் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்?

- ☞ வரலாற்றில் இஸ்ஸாமிய வழிமுறைகளை உலகிற்கு பரப்புவதில் இப்றாஹிம் அவருடைய மகன்இஸ்மாஈல் ஆகியோர் மேற்கொண்ட தியாகங்களை நினைவு கூரும் முகமாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

49) இஸ்ஸாமியரின் திருமணச் சடங்கு முறைகள்?

- ☞ குழந்தை பிறந்தவுடன் அதான் சொல்லி வலதுகாதில் ஊத வேண்டும் இடது காதில்இகாமத் சொல்லி ஊத வேண்டும்
- ☞ குழந்தை பிறந்து ஏழாம் நாள் தலை முடியை நீக்கி பெயர் சூட்டுவர்
- ☞ மணமகன். மணமகளின் சம்மதத்துடன் திருமணம் நடை பெறும்
- ☞ மணப்பெண்ணுக்கு உறவினர் இல்லையாயின் காதி நீதிவான் பிரதான சாட்சியாக இருந்து திருமணத்தை நடத்தி வைப்பர்
- ☞ மணமகன் மார்க்ககட்டளைப்படி மஹர் எனப்படும் பெண்ணுக்குரிய பங்கை கொடுத்து விட வேண்டும்
- ☞ வலீமா எனப்படும் விருந்துபசாரம் மேற்கொள்ளப்படல்.

50) இஸ்ஸாமியரின் மரணச் சடங்கு முறைகள்?

- ☞ முஸ்ஸிம் உருவர் மரணித்தபின் தாமதிக்காது மரணித்தவரின் உடலைக் குளிப்பாட்டுதல்.
- ☞ உடை அணிவித்தல்
- ☞ மையத் தொழுகையை நிறைவேற்றுதல்.
- ☞ நல்லடக்கம் செய்தல்.

51) கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விழாக்கள்?

- ☞ இயேசு பிறப்பு விழா ( கிறிஸ்மஸ்)
- ☞ இயேசு உயிர்ப்பு விழா - ( ஈஸ்டர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52) இயேசு பிறப்பு விழா கொண்டாடப்படும் காலம் ?

☞ ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 25 ஆம் திகதி

52) இயேசு பிறப்பு விழா கொண்டாடப்படுவதற்கான நோக்கமும் கொண்டாடும் முறைகளும் ?

☞ இறைவன் தனது ஒரே ஒரு மகனை இவ்வுலகிற்கு அனுப்பிய நாளாக இவ்விழாவை கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்றனர்.

☞ பாவ வாழ்விலிருந்து மீட்பதற்காக இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பியதாக கிறிஸ்தவர்கள் நம்பி இவ் விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.

☞ இக்காலத்தில் புத்தாடை அணிந்து ஆலத்திற்கு சென்று ஆராதனைகளில் கலந்த கொள்வார்கள்

☞ கிறிஸ்மஸ் கீதங்கள் பாடி இவ்விழாவினைக் கொண்டாடுவர்.

☞ உறவினர்கள் நண்பர்களுடன் கூடி மகிழ்ந்து விசேட உணவருந்தியும் இவ் விழாவினைக் கொண்டாடுவர் வழங்கியும் உபசரித்தும் இவ்விழாவினைக் கொண்டாடுவர்

53) கிறறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழாவினைக் கொண்டாடுவதற்கான காரணம்?

☞ சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததை நினைவு கூரும் முகமாக இவ்விழாவினைக் கொண்டாடுவர் .

54) கிறறிஸ்தவர்கள் உயிர்ப்பு விழாவினைக் கொண்டாடும் முறைகள்?

☞ நாற்பது நாட்கள் தவக்காலமாக அஷ்டித்து விரதமிருந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்.

☞ தவக்காலத்தின் இறுதி வாரத்தை புனித வாரமாக அனுஷ்டிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ தவக்காலத்தின் புனிதவாரத்தின் வெள்ளிக்கிழமை பெரிய வெள்ளி என அழைக்கப்படும். இவ்வாறு அனுஷ்டித்துக் கொண்டாடுவர்.

**55) கிறிஸ்தவ சமயத்தின் சடங்குகளும் சம்பிரதாயங்கள்.?**

☞ *குழந்தை பிறந்தவுடன் ஞானஸ் நானம் என்னும் சடங்கினைக் கொண்டாடுதல்.*

அதாவது பிறந்த குழந்தையினை ஆலயத்திகு எடுத்துச் சென்று வழிபாடுகள் நடத்தி குருவானவரால் ஞானஸ் நானம் வழங்கப்பட்டு இறைவனின் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனும் நம்பிக்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

☞ **திருமணச் சடங்கு**

கிறிஸ்தவ தேவாலயத்தில் பூசையின்போது குருவானவரினால் சாட்சிகள் முன்னிலையில் திருமணம் நடைபெறும் அதனை பரிசுத்த உடன் படிக்கை என அழைப்பர்

☞ **நோயிற் பூசுதல்**

இச் சடங்கானது கிறிஸ்தவர் ஒருவர் நோயுற்று இருக்கும் போது இச்சடங்கு மேற்கொள்ளப்படும்

☞ **மரணச் சடங்கு**

இறந்தவரின் உடலை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று குருவானவரால் வழிபாடுகள் நடாத்தப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**56) இலங்கையில் பௌத்தர்கள் முக்கியமாகச் சென்று வழிபாடு மேற்கொள்ளும் சமயத்தலங்கள்?**

☞ தலதாமாளிகை, ஸ்ரீமகாபோதி , ஸ்ரீறிபாத, களனி விகாரை, ருவன் வெலிசாய,

**57) இந்துக்களது பிரசித்தி பெற்றவழிபாட்டுத்தலங்கள்?**

☞ நல்லூர் கந்தசுவாமிக் கோவில்

☞ திருக்கோணேஸ்வரம், திருக்கேதிஸ்வரம்

☞ செல்வச்சந்நிதி

☞ முன்னேஸ்வரம்.,கதிர்காமம்

**58) கத்தோலிக்கர்களுக்குரிய புனித ஆலயங்கள்**

☞ புனித மடுத் தேவாலயம்

☞ கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம்

☞ தலவில புனித அந்தோனியார் தேவாலயம்.

**59) முஸ்ஸிம்களது பிரதான வழிபாட்டுத்தலங்கள்?**

☞ மக்காவில் உள்ள கபத்துல்லா பள்ளிவாசல்

☞ மதினாவிலுள்ள மஸகிதுத் நபி பள்ளி வாசல்

☞ ஜெருசலத்திலுள்ள புனித பைத்துல் முகத்துஸ் பள்ளி வாசல்

**குறிப்பு**

ஆனால் இன்று பௌத்தர்களும் இந்துக்களும் பொதுவாக கதிர்காமம் , முன்னேஸ்வரம் .திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்குச் சென்று வழிபாடு நாடாத்திவருவதனையும் இலங்கையிலுள்ள சகல இனத்தவரும் கதிர்காமம் சென்று வழிபாடு மேற்கொண்டு வருவதனை கண்கூடாகக் கண்டு கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60) **இலங்கையில் காணப்படும் பல சமயங்களும் புண்ணியத் தலங்களுக் கூடாக வளர்ச்சி அடையும் மனித நேயப் பண்புகள்?**

- ☞ அன்பு
- ☞ கருணை
- ☞ ஒற்றுமை.
- ☞ சமாதானம்
- ☞ பொது நலன்கள்
- ☞ அகிம்சை.
- ☞ முதியோரை மதித்தல்
- ☞ குருவுக்கு மரியாதை செய்தல்
- ☞ அனாதைகளுக்கு உதவுதல்
- ☞ பிறருக்கும் பிற சமயத்தவர்களுக்கும் உதவுதல்
- ☞ சூழலைப் பேணல் எனும் நோக்கங்கள் பண்புகளாக வெளிக்கொணர உதவுகின்றது.

## செயற்பாடுகள்

1) கலாசாரத்திற்குள் அடங்கும் விடயங்களைப் பட்டியல் படுத்துக?

2) பௌத்தகலாசாரத்திற்குள் காணப்படும் விடயங்கள் எவை?

3) பௌத்தர்கள் கொண்டாடும் விழாக்களையும் அவ்விழாக்கள் கொண்டாடப்படுவதற்கான காரணங்களையும் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) இந்துக்களது திருமணச் சடங்கு தொடர்பாக சுருக்கக் குறிப்பு எழுதுக?

5) உமது இல்லத்தில் நீர் கொண்டாடிய பண்டிகைகள் எவை?

6) இஸ்ஸாமியரின் சடங்குகள் சம்பிரதாயங்கள் தொடர்பான சஞ்சிகையினை தயாரிக்குக?

7.) ஆலயம் சென்று வழிபடுவதனால் ஏற்படும் பயன்கள்?

8) இந்துக்களது புனித தலங்கள் தொடர்பான படங்களை சேகரிக்க?

9) கலாசாரத்தினை மதித்து வாழ்வதனால் ஏற்படும் நன்மைகள்?

10) கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விழாக்களையும் அதற்கான காரணங்களையும் தருக?

பின்வரும் வாக்கியங்களை வாசித்து அது சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழையெனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) கலாசாரம் தனிப்பட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட படைப்பாகும் ( )

2) இலங்கை ஒரு பல்கலாசார நாடாகும் ( )

3) இலங்கையில் பெரும்பான்மை இனமாக சிங்கள இனம் காணப்படுகின்றது ( )

4) எசல என்பது பௌத்தர்கள் கொண்டாடும் விழா ஆகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) பௌத்தர்கள் திருமணச் சடங்கின் பொது ஜமங்கல கீதம் இசைப்பர் ( )

6) பல்வேறு கலாசார அம்சங்களைக் கொண்டு ஒரு சமூகம் காணப்படுகின்றது ( )

7) நாட்டின் பொருளாதாரமானது மக்களின் வினைத்திறன் மிக்க பொருளாதாரத்தில் பெரிதும் தங்கியுள்ளது ( )

9) இனங்களுக்கிடையே சமாதானம் , சகவாழ்வு ஏற்படுமனால் தேசிய அபிவிருத்தி கட்டியெழுப்பப்படும் ( )

10) சுனாமி அனர்த்திபோது மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டமை கலாசாரத்தின் வெளிப்பாடே ஆகும் ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 9

# இயற்கை அனர்த்தங்களும் விபத்துக்களும்

**1) இயற்கை அனர்த்தம் என்றால் என்ன?**

☞ இயற்கை அனர்த்தம் எனப்படுவது இயற்கைத் தன்மையாகவே ஏற்படும் அழிவுகளாகும்.

**2) பூமியில் வருடம்தோறும் இடம் பெறும் இய்றகை அனர்த்தங்கள்?**

☞ இடித்தாக்கங்கள், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பூமியதிர்வு, காட்டுத்தீ,புயல், சூறாவளி, எரிமலை வெடிப்பு, சுனாமி. மின்னல் பாதிப்புக்கள்

**3) அனர்த்தங்களின் வகைகள்?**

☞ இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்கள். மனித செயற்பாடுகளினால் ஏற்படும் அனர்த்தங்கள்.

**4) வெள்ளப் பெருக்கு என்றால் என்ன?**

☞ வெள்ளப்பெருக்கு என்பது நதிகளில் நீர் நிரம்பி வழியும் ஒரு செயற்பாடாகும். இவ்வனர்த்தம் பரவலாகக் காணப்படும் இயற்கை அனர்த்தம் ஆகும்

**5) வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்களாக?**

☞ இடைவிடாது தொடர்ச்சியான பெய்யும் மழை.

☞ மண் கரைந்து செல்லுதல்

☞ நதிக்கரைகளிலும் , அடியிலும் கனமான பாறைகள் காணப்படுவதால் நீர் ஊறிஞ்சப்படாமல் அடித்துச் செல்லப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நதியின் கழிமுகம் கடல் மட்டத்தை விட தாழ்ந்து காணப்படுதல்.
- மனிதனது செயற்பாடுகளாக காடழிப்பு, மணல் அகழ்தல், மேட்டு நில விவசாயம் என்பன காரணங்களாக அமைகின்றது.

**6) வெள்ளப்பெருக்கு ஏற்படுவதில் பங்களிப்புச் மனித செயற்பாடுகள் எவை?**

- ஆறுகளிலிருந்து மண் அகழ்தல்
- ஆற்றங்கரைகளில் அனுமதியின்றி கட்டுமானங்களை மேற்கொள்ளல்
- சதுப்பு நிலங்களை நிரப்புதல்
- மலைச்சரிவுகளில் உள்ள மரங்களை வெட்டுதல்.

**7) வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் சேதங்களை குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்?**

- பாய்ந்தோடும் நீரிலிருந்து விலகியிருத்தல்.
- வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பிரதேசங்களில் நடந்தோ, வாகனங்களிலோ பயணிப்பதைத் தவிர்த்தல்.
- நிலத்திலுள்ள மின்கம்பங்கள், மின்கம்பிகளுக்கு அருகே செல்வதைத் தவிர்த்தல்.
- வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பிரதேச நீரைகுடிக்கவோ, உணவு சமைக்கவோ பயன்படுத்தாதிருத்தல்.

**8) உலகில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பிரதேசங்கள்?**

- வட அமெரிக்காடெக்ஸாஸ் பிரதேசம்
- மத்தியமெரிக்காவின் உக்டான் பிரதேசம்
- மேற்கீந்திய தீவுப்பிரதேசங்கள்
- பங்களாதேஸ்
- சீனாவின் ஹொவாங்கோ சமவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பிலிப்பைஸ்
☞ மிசிசிப்பி பள்ளத்தாக்கு
☞ இந்தியாவின் கங்கை நதி
☞ யாங்சியாப் பள்ளத்தாக்கு

**9) இலங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் இடங்கள்?**

☞ கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி. அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை. திருகோணமலை, இரத்தினபுரி,

**10) சூறாவளி உருவாகும் முறை?**

☞ குளிரும் வெப்பமுமான காற்று இரண்டு மோதுவதால் வெப்பமான காற்று சுழன்று மேலெழும்பும் அப்போது அவ்விடம் வெறுமை அடையும் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தூரத்திலிருந்து பாரமான காற்று மேலெழும்பும்போது சூறாவளி உண்டாகுகின்றது.

**11) ஹரிக்கன் புயல் காற்று (சூறாவளி ) விசும் பிரதேசம் ?**

☞ அத்திலாந்திக் சமுத்திரம்

**12) தைமூன் புயல் காற்று (சூறாவளி ) விசும் பிரதேசம் ?**

☞ பசுபிக் பிரதேசம்

**13) விலிவீல்ஸ் புயல் காற்று (சூறாவளி ) விசும் பிரதேசம்?**

☞ அவுஸ்ரேலியா.

**14) சைக்லோன் புயல் காற்று (சூறாவளி ) விசும் பிரதேசம்**

☞ இந்து சமுத்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15) சூறாவளி ஏற்படுவதற்கான காரணங்கள்?**

☞ வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்க வலயம்.

☞ வளிமண்டலத்தின் அசைவுகள்.

☞ வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களின் தாக்கம்

☞ தென்மேல் பருவப்பெயர்ச்சிக்காற்று.

**16) இலங்கையில் சூறாவளி ஏற்படும் பிரதேசங்கள்?**

☞ யாழ்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு , அம்பாறை, அநுராதபுரம், குருநாகல், வவுனியா, அம்பாந்தோட்டை.

**17 ) சூறாவளி ஏற்படும் சந்தர்பங்களில் பாதுகாப்புக்காக செய்ய வேண்டிய நடவடிக்கைகள்?**

☞ கால நிலை அவதான நிலையம் தொலைத்தொடர்பபு ஊடகங்களுக்கு ஊடாக விடுக்கும் முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களைச் செவிமடுத்தல்.

☞ பிரதேசத்தை விட்டு விலகி இருக்குமாறு உத்தரவிட்டால் அப்பிரதேசத்தை விட்டு விலகி இருத்தல்

☞ பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்லல்.

☞ தண்ணீரபோத்தல், முதலுதவிப்பொருட்கள், உலர் உணவுகள் மின்கலம் மூலம் இயங்கும் வானொலிப் பெட்டி.மின்குமிழ், போன் பொருட்கள் அடங்கிய தொகுதியோன்றினை எடுத்துச்செல்லல் பயனுடைய தொன்றாக அமையும் .

**18) சுனாமி என்பதன் பொருள்?**

☞ துறைமுக அலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19) சுனாமி ஏற்படுவதற்கான காரணங்கள்?**

☞ கடலுக்கடியில் எரிமலை வெடிப்பதனாலும் பூமி அதிர்வுகள். புவியினுள்ளே இடம்பெறும் இயற்கையான அசைவுகள்.

**20) இலங்கையில் சுனாமி ஏற்பட்ட காலப்பகுதி?**

☞ 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 இல்

**21) சுனாமியின்போது ஏற்படக் கூடிய சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வழி முறைகள்?**

☞ தொடர்புசாதனங்களால் விடுவிக்கப்படும் காலநிலை எதிர்வு கூறல்களில் அவதானம் செலுத்துதல்.

☞ எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பின் அப்பிரதேசத்தை விட்டு விலகல்

☞ சுனாமி எச்சரிக்கை நிலையங்களுக்குடாக விடப்படும் தகவல்களை தெரிந்து கொள்ளல்

**22) சுனாமியால் ஏற்படும் சேதங்களை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மனித செயற்பாடுகள்?**

☞ கடற்கரையில் இருக்கும் தாவரங்களை அழித்தல்

☞ கண்டற் சூழற் தொகுதியை அழித்தல்

☞ முருகைக்கற்பாறைகளை உடைத்தல்

☞ கடற்கரையில் மணல் மேடுகளை நீக்கல்.

**23) மண்சரிவு என்பது?**

☞ மணல் படைகள், பெரியபாறைகள், போன்றன உயரமான நிலப்பிரதேசங்களிலிருந்து கீழ்பகுதி நோக்கி சரிந்து விழுவது மண்சரிவு எனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) இலங்கையில் அடிக்கடி மண்சரிவு ஏற்படும் பிரதேசங்கள்?

- கண்டி
- நுவரேலியா
- பதுளை,
- கேகாலை,
- இரத்தினபுரி.
- மாத்தளை

25) மண்சரிவு ஏற்படும் அறிகுறிகளை இனங்காணல்.

- அதிக மழை வீழ்ச்சி
- நிலம் வெடித்து கீழிறங்குதல்
- சரிவுகளிலுள்ள கட்டிடங்கள் வெடிப்புக்குள்ளாதல்.
- திடீரென நீர் ஊற்றுக்களும் சேர் ஊற்றுக்களும் உருவாதல்
- கற்பாறைகள், மண் மெதுவாக கீழிறங்குதல்.

26) மண்சரிவினைக் குறைப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள்?

- படிமுறைப்பயிற் செய்கையில் ஈடுபடல்
- நீர் வழிந்தோடக்கூடிய வடிகால்களை அமைத்தல்
- மண் பாதுகாப்பிற்காக மரங்களையும் செடிகளையும் வளர்த்தல்.
- நீர் செல்லும் வழிகளைத் தடைசெய்யாது இருத்தல்
- மண்ணரிப்பினைத் தடுக்க கம்பி வலை ஆகியவற்றைக் கொண்டு கட்டுக்கள் அமைத்தல்.

27) மின்னல் என்பது?

- மேகங்களிலுள்ள நீர் ஆவியாகி மேலே செல்லும்போது மேகங்களின் மேற்பாகம் வளியுடன் உராய்வதால் அது வெப்பம்மேற்பட்டு மின்சாரமாக மாறுகின்றது.மேகங்களின் மேற்பகுதியில் நேர் மின்னாகவும். மேகங்களின் அடிப்பகுதி மறை மின்னாகவும் செல்லும்போது மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வதால் தீப்பொறி ஏற்பட்டு மின்னலாக மாறுவதை மின்னல் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) இடி மின்னல் அபாயம் உள்ள பிரதேசங்களில் பின்வருவனவற்றை அவதானிக்கலாம்?

- இடியுடன் மழை பெய்தல்
- மின்னலுடன் கூடிய முழக்கம்
- வெப்பம் அதிகரித்தல்

29) இடி மின்னலிருந்து பாதுகாப்பினைப் பெறும் வழிகள்?

- மின்சாரத்தினை முறையாகத் துண்டித்தல்
- திறந்த வெளியில் இருப்பதை முறையாகத் தவிர்த்துக் கொள்ளல்
- பாரிய மரங்களுக்கு கீழும் உயர்ந்த இடங்களிலும் இருப்பதை தவிர்த்துக் கொள்ளல்
- மின்னுபகரணங்களையும் தொடர்பாடல் சாதனங்களைப் பாவிப்பதையும் விலக்கிக் கொள்ளல்.
- கூரையற்ற வாகனங்களில் பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளல்.

30) இடி மின்னலிலிருந்து பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான வழி முறைகள்?

- வீடுகளிலும் கட்டிடங்களில் மின் தொடர்புகளுடன் கூடிய நிலக்கம்பியிடல்
- வீடுகளுக்கும், கட்டிடங்களுக்கும் அருகில் மரங்களை வளர்க்காமல் இடிதாங்கிகளை அமைத்தல்
- வீடுகளுக்கும் மரங்களுக்கும் இடையில் உலோகக் கம்பிகளின் தொடர்புகளை ஏற்படுத்தாது இருத்தல்.

31) வறட்சி அபாயம் உள்ள பிரதேசங்களில் பின்வருவனவற்றை அவதானிக்கலாம்?

- மழையின்மி 15 தினங்களுக்கு மேல் காணப்படல்
- வெப்பம் அதிகமாக இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலைகள் வாடுதல்
- தெளிவாக சூரிய வெளிச்சம்
- களிமண் தரை வெடித்தல்
- நிலக்கீழ் நீர் மட்டம் குறைதல் .

**32) வறட்சியிலிலிருந்து பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான வழி முறைகள்?**

- நீரை வீண்வீரையம் செய்யாது பாவித்தல்.
- மரஞ் செடி கொடிகளை அகற்றாது இருத்தல்.
- கால்வாய் ஆறுகளை அசுத்தப்படுத்தாது இருத்தல் .

**33) வறட்சியினைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்?**

- மரம் செடி கொடிகளை அமைத்தல்
- நீரேந்துப் பிரதேசமான காடுகளை அழிவடையாது பாதுகாத்தல்
- மழை நீர் தாங்கிகளை அமைத்தல்

**35) இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்கங்கள்?**

- சொத்துக்கள் அழிதல்
- பயிற்செய்கை நிலம் அழிதல்
- கால்நடைகள் அழிதல்
- உணவு உற்பத்தி குறைதலல்
- காடுகள் அழிதல்
- அடிப்படை வசதிகள் குறைதல்
- மானியம் வழங்ல், மீள் நிர்மானம் போன்ற அரச செலவுகள் அதிகரித்தல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) **இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் சமூகத்தாக்கங்கங்கள்?**

- ☞ அதிக உயிரழிவுகள் ஏற்படல்
- ☞ வாழிடங்கள் அற்றுப்போதல்
- ☞ நோய்கள் ஏற்படல்
- ☞ அன்றாட நடவடிக்கை சீர்குலைதல்
- ☞ உளரீதியான பாதிப்பு ஏற்படல்
- ☞ குற்றங்களும் துஸ்பிரயோகங்களும் ஏற்படல்.
- ☞ அடிப்படை வசதிகள் அற்றுப்போதல் .

37) **அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாம் துரிதமாக பின்பற்ற வேண்டிய பணிகள்?**

- ☞ விபத்துக் குள்ளானவரைக் காப்பாறுதல்
- ☞ சரியான முதலுதவி அளித்தல்
- ☞ காயப்பட்டோருக்கு சிகிச்சையளிக்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- ☞ பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்தல்
- ☞ சுகாதாரசேவைகளுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்தல்
- ☞ விபத்துக்குள்ளானவர்கள் மீது அன்பு. கருணை இரக்கம் . காட்டுதல்
- ☞ இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக்கொடுத்தல்
- ☞ அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினைப் பெற்றுக்கொடுத்தல்

38) **வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு சாரதிகளால் விடப்படும் தவறுகள்?**

- ☞ செல்லுபடியான வாகன அனுமதிப்பத்திரம் பெறாது வாகனம் செலுத்துதல்.
- ☞ அதிகூடிய வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல்
- வீதிச் சமிக்கைகள் மற்றும் ஒழுங்குகளைப் பின்பற்றாமையும் அறியாமையும் .
- அதிக களைப்பமைடந்துள்ள வேளையிலும் வாகனத்தைச் செலுத்துதல்.
- வாகனத் தை தச் செலுத்தும்போது ஏனைய வாகனங்கள், மற்றும் பாதசாரிகளைக் கவனியாமை.
- போக்குவரத்திற்கு பொருத்தமற்ற வாகனத்தைச் செலுத்துதல்.
- கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்துதல்.
- மேலதிக பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லல்.

**39) வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு பாதசாரிகளால் விடப்படும் தவறுகள்?**

- போக்குவரத்துச் சட்ட திட்டங்கள் பற்றிக் கவனம் செலுத்தாமையும் அறிந்திராமையும்
- கவனயீனமாக வீதியில் நடந்து கொள்ளல்
- கூட்டமாகச் செல்லுதல்
- கையடக்கத் தொலைபேசியினைப் பயன்படுத்திக்கொண்டு செல்லுதல்.

**40) வீதி விபத்துக்கள் ஏற்படுவதில் வீதிகளின் நிலமைகள் எவ்வாறு பங்கு வகிக்கின்றன.**

- வீதிகள் முழுமையாக பராமரிக்கப்படாமை.
- வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படல்
- வீதிகளில் காணப்படும் சமிக்ஞை விளக்குகள், சமிக்ஞைப் பலகைகள் பராமரிக்கப்படாமை.
- நாளாந்தம் பெருகிவரும் வாகனப்
- பெருக்கத்திற்கேற்ப வீதிகள் பெருப்பிக்கப்படாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) **வீதி விபத்துக்களின்போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள்?**

- ☞ காயமடைந்தவருக்கு சூழ இருப்போர் உதவி செய்தல்
- ☞ விபத்துக்கள் நடந்தவுடன் அதனை பொலீசாருக்கு அறிவித்தல்.
- ☞ விபத்துக்கள் ஏற்பட்டவுடன் அதனோடு தொடர்புடைய வாகன காரர்களுடன் முரண்பட முற்படுதல் கூடாது.
- ☞ விபத்துக்குள்ளானோரின் பணம், பொருள், மற்றும் உடைமைகள் யாவற்றையும் பாதுகாத்துக் கொடுத்தல்.
- ☞ விபத்து ஏற்பட்டவரின் நெருங்கிய உறவினர்களுக்கு அறிவித்தல்.
- ☞ பொறுமையினைக் கடைப்பிடித்தல்.

42) **இரசாயனப் பொருட்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்?**

- ☞ விவசாய நடவடிக்கைகளுக்கு இரசாயன கிருமிநாசிகளைப் பயன்படுத்துதல்
- ☞ வீட்டுத்தோட்டங்களுக்கு கிருமிநாசினிகளைப் பயன்படுத்துதல்.
- ☞ சுகாதார சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு சலவைத்தூள் பயன்படுத்துதல்.
- ☞ கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துதல்.
- ☞ வீட்டுச்சுவர், தளபாடங்களுக்கு வர்ணம் பூசும் போது பயன்படுத்துதல்.

43) **இரசாயப் பொருட்களால் விபத்துக்கள் நேரக் கூடிய வழிகள்?**

- ☞ இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்காமை.
- ☞ இரசாயனப் பொருட்களின் பாவனை தொடர்பான அறிக்கையினை பின்பற்றாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ உணவப்பொருட்களை வைக்குமிடத்தில் இரசாயனப் பொருட்களை வைத்தல்.
- ☞ சிறுவர்களின் கைக்கெட்டிய தூரத்தில் வைத்தல்.
- ☞ கிருமிநாசினிகளை விசிறி பணியைச் செய்வோர் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி கையுறை, பாதணி, தலைக்கவசம், பாதணி, நாசியுறை என்பவற்றை உரியவாறு பயன்படுத்தாமை.
- ☞ இரசாயனப்பொருட்களை விசிறிய கருவிகளை நீர் நிலைகளில் கழுவுதல்.
- ☞ இரசாயனப் பாவனையில் ஈடுபட்டவர் நன்றாக சுத்தம் செய்யாமல் உணவு உட்கொள்ளுதல்.

**44) இரசாயப் பொருட்கள் உடலினுள் உட்புகும் வழிகள்?**

- ☞ சுவாசித்தலின்போது உட்புகுதல்
- ☞ வாய் மூலம் உட்புகுதல்.
- ☞ கண்ணில் படுதல் மூலம்
- ☞ காயங்களுக்குடாக.
- ☞ சருமத்தின் ஊடாக இரசாயனப் பொருட்களின் ஊடாக உட்புகுதல்

**45) இரசாயன விபத்துக்களை தவிர்ப்பதற்கான வழிவகைகள்.**

- ☞ இரசாயனப்பொருட்கள் அடங்கிய போத்தல்கள், பொதிகளின் லேபல்கள் தென்படும் வகையில் களஞ்சியப்படுத்தல்.
- ☞ சிறு பிள்ளைகள் எடுக்கமுடியாத இடங்களில் களஞ்சியப்படுத்தல்.
- ☞ இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தும்போது அறிவுறுத்தல்களைப் பின்பற்றல்.
- ☞ அவசியமில்லாத இரசாயனப்பொருட்கள் வைத்திருப்பதை தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரசாயப் பொருள்பயயன்படுத்திய கருவியை பொது நீர்நிலைகளில் சுத்தப்படுத்தாமல் தவிர்த்தல்.
- இரசாயனப் பொருள் பாவனையில் ஈடுபட்ட நபர் உடலை நன்றாக கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்,

## செயற்பாடுகள் -

1) இயற்கை அனர்த்தம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
2) மண்சரிவு இலங்கையில் ஏற்படும் பிரதெசங்களை - இலங்கைப்படத்தில் குறித்துக்காட்டுக?
3) புவி நடுக்கத்தை அளவிடும் கருவி எது?
4) இலங்கைக்கு மழைகிடைக்கும் பருவங்களைப் பெயரிடுக?
5) துறைமுக அலை என அழைக்கப்படுவது யாது?
6) மின்னலினால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?
7) வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?
8) மண்ணரிப்பு எனற்றால் என்ன?
9) விபத்துக்கள் ஏற்படும் சந்தர்பங்கள்?
10) காடுகளைக் பாதுகாப்பதினால் ஏற்படும் நன்மைகள்?
11) வன்முறைகளால் ஏற்படும் விளைவுகள் எவை?
12) வீதிக் குறியீடுகள் தொடர்பான படங்களைச் சேகரிக்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வாக்கியங்களை வாசித்து சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) மனிதன் இயற்கை அனர்தத்தினை எதிர்கொள்கின்றான் ( )

2) காடுகளைப் பாதுகாப்பதனால் சூழல் சமநிலையைப் பெற்றுக்கொள்ளலாம் ( )

3) கடற்கரையோர கற்களை அகழ்வதனால் கடலரிப்பு ஏற்படுகின்றது ( )

4) புவி நடுக்கத்தை அளவீடும் கருவி ரிக்டர் அளவத்திட்டமாகும் ( )

5) வீதி விபத்துக்களால் மரணமடைவொரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது ( )

6) காற்று அரிப்பை ஏற்படுத்தும் கருவிகளில் ஒன்றாகும் ( ).

7) சாரதிகளின் தவறு விபத்துக்களுக்கு காரணமாகும் ( )

8) வறட்சி இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாகும் ( )

9) அரசசார்பற்ற நிறுவனங்கள் இயற்கை அனரத்தத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு உதவி வழங்கும்நிறுவனங்களாகும் ( )


10) மனித செயற்பாடுகள் காரணமாகவும் விபத்து ஏற்படுகின்றது. ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dina
&
civi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிவர இருப்பவை

தரம் 11 வரலாறு (CD Book)
(புதிய பாடத்திட்டம்)

தரம் 10 வரலாறு (CD Book)
(புதிய பாடத்திட்டம்)

தரம் 07 வரலாறு (CD Book)
(புதிய பாடத்திட்டம்)

5 E மொடல்களுக்கு அமைவாக தொகுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org